**தமிழக அரசின் நிதி மற்றும் பொதுப் பணிகள் அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், 2014–2015 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை, 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றும் உரை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி யிடத்தாற் செயின்

(குறள் 484)

தெய்வப் புலவர் திருவள்ளுவரின் இந்த அமரத்துவம் வாய்ந்தச் சொற்களில் பொதிந்துள்ள அளவற்ற விவேகத்திற்கு உறைவிடமாகத் திகழும் தன்னிகரில்லாத் தலைவி, மாண்புமிகு முதலமைச்சர் **புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா** அவர்கள், மாநிலத்தின் மேம்பாட்டிற்காகவும் மக்களின் நலனுக்காகவும் அயராது பாடுபட்டு வருவதுடன், தக்க தருணத்தில் உரிய முடிவுகளை திறம்பட மேற்கொண்டு, தான் எடுக்கும் பெருமுயற்சிகளிலெல்லாம் வெற்றிவாகை சூடிவருகிறார்கள். நமது மாநிலத்தை வெற்றிப் பாதையில் கொண்டு செல்லும் அவர்கள், நாட்டின் மிக உன்னதத் தலைவராக உயர்வது உறுதி. அவர்களுடைய நல்லாசியுடன் 2014–2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன். தொடர்ந்து நான்காவது முறையாக, இம்மாமன்றத்தின் முன் நிதிநிலை அறிக்கையை வைக்கும் நல்வாய்ப்பினை எனக்கு நல்கிய, தொலைநோக்குப் பார்வையுடன் அறிவார்ந்த முடிவுகளை எடுக்கவல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் நான் நன்றிக் கடன்பட்டுள்ளேன்.

2. இந்த அரசு வெற்றிகரமான மூன்று ஆண்டுகளை நிறைவு செய்து விரைவில் நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைக்க உள்ளது.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதுடன், சாதாரண மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய எண்ணற்ற நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார்கள் என்பதை இங்கு பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். நமது நாட்டில், எந்த மாநிலத்தின் வரலாற்றிலும், எக்காலகட்டத்திலும், எந்த முதலமைச்சரும் குறுகிய மூன்றாண்டு காலகட்டத்தில் இத்துணை திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியதில்லை. நிதிநிலை அறிக்கை மூலம் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் தவிர, கருணையுள்ளம் கொண்ட நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்த அறிவிப்புகளின் எண்ணிக்கையே, அவர் மக்களின் நலனில் ஒருமனதாக கவனத்தைச் செலுத்தி வருகிறார் என்பதற்குச் சான்றாகும். அவரின் அறிவு, கடமையுணர்வு, முயற்சி ஆகியவற்றால் தனிமனிதராக மாநிலத்தை வளர்ச்சிப்பாதைக்கு மீளக் கொண்டு வந்துள்ளார்கள். வளர்ச்சியையும், வளத்தையும் பெருக்கும் பாதையில் மேலும் முன்னேறிச் செல்ல இந்த நிதிநிலை அறிக்கை உறுதியாக வழிவகுக்கும்.

**பொருளாதார வளர்ச்சி**

**3.** சரிநிகர் வளர்ச்சியை எட்ட மாநில அரசு கடுமையாக முயன்று வரும் அதே வேளையில், வளர்ச்சியைத் தூண்டவும், நலிவுற்றுவரும் பேரியல் பொருளாதாரச் சூழ்நிலைகளை (macro economic environment) மேம்படுத்தவும், மத்திய அரசு தவறியதன் காரணமாக, பொருளாதார வளர்ச்சியும், முதலீடுகளும் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக பாதிப்புக்குள்ளாகியுள்ளன. தொடரும் பொருளாதார மந்தநிலையால் மாநில வரி வருவாயும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், முக்கியத் துறைகளில் அரசின் முதலீடுகளைக் குறைக்காமல் தமிழ்நாடு நிதி பொறுப்புடைமைச் சட்ட குறியீடுகளைக் கடைபிடிப்பதும் மிகவும் கடினமான சவாலாக அமைந்துள்ளது. **2013–2014** ஆம் ஆண்டு

மாநிலப் பொருளாதார வளர்ச்சி ஐந்து சதவீதத்திற்குக் கூடுதலாக இருக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் இந்த நிலை மாறுவதற்கான சில அறிகுறிகள் தென்பட்டுள்ளன. இருப்பினும், வளர்ச்சியைத் தூண்டி மாநிலத்தை மீண்டும் துரித வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல, பெரும் முயற்சிகள் தேவைப்படுகின்றன. இதற்கு நம்பிக்கைதரும் வகையில் மின்சக்தி நிலையில் ஒரு நல்ல மாற்றம் ஏற்பட்டு, தொழில் வளர்ச்சியும் மீண்டும் உயரத் தொடங்கியுள்ளது.

**4.** பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான சாதகமான சூழலை உருவாக்கிட இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருவதுடன், முக்கியத் துறைகளில் மாநில அரசின் முதலீட்டையும் அதிகரித்துள்ளது. மேலும் **2014–2015** ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு **42,185** கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், பன்னிரெண்டாவது திட்ட காலத்தில் எய்தப்பட வேண்டிய திட்ட ஒதுக்கீட்டுக் குறியீடான **2.11** இலட்சம் கோடி ரூபாயில், **2014–2015** ஆம் ஆண்டுவரையான திட்டச் செலவினம் ஒரு இலட்சத்து ஏழாயிரம் கோடி ரூபாய் அளவை விஞ்சும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தியதைக் கருத்தில் கொண்டு, மத்திய திட்டங்களுக்கான நிதியை, மாநில தொகுநிதி மூலமாக விடுவிக்காமல், சிறப்பு செயலாக்க முகமைகளின் (Special Purpose Vehicle) மூலமாக இதுவரை ஒதுக்கி வந்த நிலையைக் கைவிட்டு, மாநில வரவு–செலவுத் திட்டம் மூலமாகவே வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த நடவடிக்கை சிறந்த நிதி மேலாண்மைக்கும், பொறுப்புடைமைக்கும் நிச்சயம் வழிவகுக்கும்.

## வறுமை ஒழிப்பு

**5.** மாநிலத்தில் உள்ள கிராமப்புற வறுமையை ஒழிப்பதற்கு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **2012–2013** ஆம் ஆண்டு முதல், தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம், நமது

மாநிலத்தில் தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார இயக்கமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள 31 மாவட்டங்களிலும் கிராமப்புற ஏழை மக்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 385 வட்டாரங்களில் 4,170 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய 120 வட்டாரங்களில் உலக வங்கி உதவியுடன் புதுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 265 வட்டாரங்களுக்குட்பட்ட 8,354 கிராம ஊராட்சிகளில் 'தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார இயக்கம்' படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

6. தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார இயக்கம் பொருளாதார வாய்ப்புகளைத் தரக் கூடிய குறிப்பிட்ட பணிகளை, குழும முறையில் ஊக்குவித்து வறுமையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுவரை, பொருளாதார வாய்ப்புகளைத் தரத்தக்க பணிகளின் அடிப்படையில் 161 குழுமங்கள் இத்திட்டத்தால் உருவாக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 6,000 கோடி ரூபாய் அளவிற்கு கடன் இணைப்பு வசதி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 3,847.07 கோடி ரூபாய் அளவிற்கு கடன் இணைப்பு வசதி வழங்கப்பட்டுள்ளது. திறன் மேம்பாட்டு முகாம்கள் மூலமாக இளைஞர்களின் திறன் தேவை மதிப்பிடப்பட்டு, 2013–2014 ஆம் ஆண்டில் 14 கோடி ரூபாய் செலவில் 14,050 இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. **2014–2015 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார இயக்கத்திற்கென 253.92 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, புதுவாழ்வுத் திட்டத்திற்காக 2014–2015 ஆம் ஆண்டிற்கு 49.05 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**

7. நகரப் பகுதிகளில் மக்கள் தொகை பெருகி வரும் நிலையில் நகர்ப்புர வறுமை ஒரு பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது.

நகர்ப்புர பகுதிகளில் சுமார் 17.28 லட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களாக ஏற்கெனவே கண்டறியப்பட்டுள்ளன. சமூகப் பொருளாதார சாதி கணக்கெடுப்பு (SECC), நகர்ப்புர மனிதவள புள்ளிவிபரம் (USHA) மற்றும் ராஜீவ் வீட்டுவசதித் திட்டம் (RAY) போன்ற திட்டங்களில் கண்டறியப்பட்ட வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் விபரம் ஏற்கெனவே உள்ள புள்ளி விபரங்களோடு ஒத்திசைவு செய்யப்பட்டு வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் புதிய ஒருங்கிணைந்த பட்டியல் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. நகர்ப்புர வறுமையை எதிர்கொள்வது ஒரு மிகுந்த சவாலான பிரச்சினை என்பதால், 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்' என்ற பெரும் முன்முயற்சியை மாநில அரசு ஏற்கெனவே தொடங்கியுள்ளது. தகுதியானவர்கள் விடுபட்டுவிடாமல் உதவத்தக்க நெகிழ்வுத் தன்மையோடு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மத்திய அரசும் சுவர்ண ஜெயந்தி ஸகாரி ரோஜ்கார் யோஜனா என்ற திட்டத்தை தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கமாக மாற்றியமைத்து 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தொடங்கியுள்ளது. இத்திட்டங்களின் நோக்கத்தைச் சிறப்பான முறையில் எட்டிட தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கமும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கமும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும். **தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு 2014–2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் நிதி ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தில் வீடுகளற்ற ஆதரவற்றோருக்கு 62 புதிய காப்பிடங்கள் ஏற்படுத்தப்படுவதுடன், ஏற்கெனவே இயங்கி வரும் 45 காப்பிடங்களை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.**

**சட்டம் ஒழுங்கு**

8. திறனிலும், செயல்பாட்டிலும் சிறப்புமிக்கதாக விளங்கும் தமிழ்நாடு காவல்துறை மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை திறம்பட நிர்வகித்து வருகிறது. புதிய சவால்களை திறம்பட எதிர்கொள்வதற்காக மாநில காவல்துறை தொடர்ந்து தங்களின் செயல்திறனை மேம்படுத்தி வருவதுடன், சிறந்த செயல் வழிமுறைகளையும், நெருக்கடியான சூழ்நிலைகளுக்கான செயல் திட்டங்களையும் பின்பற்றுவதுடன், விரைந்து செயல்படும் பிரிவுகளையும் உருவாக்கி செயல்பட்டு வருகிறது. காவல் துறையினரின் ஊக்கத்தை உச்ச நிலையில் கட்டிக் காக்க இந்த அரசு பல்வேறு நலத்திட்டங்களையும் பிற நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. **காவல்துறைக்கான ஒதுக்கீடு 2010–2011 ஆம் ஆண்டில் 3,184.47 கோடி ரூபாயாக இருந்ததை, 2014–2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 5,186.20 கோடி ரூபாய் அளவுக்குக் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.**

9. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முதற்கட்டமாக திருவள்ளூர், அரியலூர், சிவகங்கை மாவட்டங்களிலும், கோயம்புத்தூர் மாநகர காவல் பகுதியிலும் தொடங்கப்பட்ட, குற்றங்களையும் குற்றவாளிகளையும் கண்காணிக்கும் இணைப்புத் திட்டம் (CCTNS) 26.9.2013 முதல் மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இத்திட்டத்தின் வாயிலாக, உரிமம் கோரும் மனுக்கள், புகார் மனுக்கள் போன்றவற்றை இணையதளம் மூலம் பதிவு செய்யும் வசதி வாய்ப்புகள் ஏற்படும். இதன் மூலம் பொதுமக்கள்–காவலர்கள் இடையே உள்ள தொடர்பில் வெளிப்படைத் தன்மையும் பொறுப்புணர்வும் உயர வாய்ப்பு ஏற்படும்.

10. 2013–2014 ஆம் ஆண்டில், 44.36 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய காவல் நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கும், 160.99 கோடி ரூபாய் மதிப்பிலான குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கும், 142.62 கோடி ரூபாய் மதிப்பிலான பிற அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. **2014–2015 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் காவல் நிலையக் கட்டடங்கள், குடியிருப்புக் கட்டடங்களுடன் பிற அலுவலகக் கட்டடங்கள் கட்ட 571.67 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**

11. காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தில் 2011–2012 ஆம் ஆண்டு முதல், 2013–2014 ஆம் ஆண்டு வரை 196.14 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்கென 130.85 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. கடந்த மூன்றாண்டுகளில் காவல் துறையினரின் எண்ணிக்கை கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்றது முதல் 24,503 புதிய காவலர் மற்றும் அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. **இந்தியாவிலேயே முதல் முறையாகத் தொடங்கப்பட்டுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைத் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்த உன்னதத் திட்டமாகும். ஏற்கெனவே உறுதியளித்தவாறு, இத்திட்டத்திற்கென 10,099 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.** இதுவரை ஆறு புதிய காவல் நிலையங்களும், 44 புதிய போக்குவரத்துக் காவல் நிலையங்களும், இரண்டு புதிய காவல் கோட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளதுடன், 117 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இது தவிர 15 மாவட்டங்களுக்கு 32 புதிய ஆயுதப் படைப் பிரிவுகளும், ஓர் ஆயுதப் படைக் கம்பெனியும் உருவாக்கப்பட்டு,

இவற்றிற்கென 2,109 கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு காவலர்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்த்தப்பட உள்ளது.

**தீயணைப்பு, மீட்பு பணிகள்**

13. தீயணைப்பு, மீட்பு பணிகள் துறையின் சாதனைகள் பாராட்டத்தக்கவை. இத்துறைப் பணியாளர்களின் தன்னலமற்ற சேவைகளின் மூலம் 2013–2014 ஆம் ஆண்டில் 3,474 உயிர்களும் 325.62 கோடி ரூபாய் மதிப்பிலான உடைமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. தீயணைப்பு, மீட்புப் பணிகள் துறைக்கு நவீன மீட்புக் கருவிகளையும் உபகரணங்களையும் வழங்குவதற்கு உரிய முக்கியத்துவத்தை இந்த அரசு தொடர்ந்து அளித்து வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டில், 101 மீட்டர் வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட இரண்டு ஊர்திகள், 10 நவீன ரக நீர் தாங்கி வண்டிகள், 52 உயர் அழுத்த பம்புகள், 38 ஒருங்கிணைந்த கருவிகள் மற்றும் நான்கு சிறப்பு ஊர்திகள் ஆகியவற்றிற்காக 50.50 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 189.65 கோடி ரூபாய் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**சிறைச்சாலைகள்**

14. சிறைவாசிகள் விடுதலையாகி இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும்போது, திருந்திய மனிதர்களாக வாழ வழிசெய்யும் வகையில், அவர்களை சீர்திருத்தி மறுவாழ்வு அளிப்பதற்கு உகந்த இடமாகவே சிறைச்சாலைகளை இந்த அரசு கருதுகிறது. தகுந்த தொழில் திறனை சிறைவாசிகள் பெறுவதன் மூலம் அவர்களுடைய ஆற்றலை ஆக்கப்பூர்வமான வழிகளில் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படும். இந்த அரசின் ஒரு புதிய முயற்சியாக, சிறைவாசிகள் தயாரித்த பொருட்களைக் காட்சிப்படுத்த புழல் மத்திய சிறை வளாகத்தில் ஒரு சிறை அங்காடி தொடங்கப்பட்டுள்ளது. புழலில் உள்ள மத்திய சிறை வளாகத்தில்

ஓர் அடுமனை தொழிற்கூடமும் உருவாக்கப்பட்டுள்ளது. இது போன்ற முயற்சிகளை மேலும் ஊக்கப்படுத்த, **2014–2015 ஆம் ஆண்டில் ஐந்து கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறை வளாகங்களில் ஏற்கனவே அமைந்திருக்கும் தொழிற்கூடங்களை மேம்படுத்தவும், உகந்த தொழில்பிரிவுகளில் புதிய தொழிற்கூடங்களைத் தொடங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.** 2014–2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 194.66 கோடி ரூபாய் சிறைச்சாலைகள் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**நீதி நிருவாகம்**

15. நீதித்துறை உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு இந்த அரசு சிறப்பு முன்னுரிமை அளித்து வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டில், புதிய நீதிமன்றக் கட்டடங்களையும், குடியிருப்புகளையும் அமைக்கவும், வாகனங்கள், இதர உபகரணங்கள் போன்ற வசதிகளை அளித்திடவும் 70.67 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர, புதிய நீதிமன்றங்களை உருவாக்குவதற்கு 28.84 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. பதிமூன்றாவது நிதிக்குழுவின் மானிய நிதியின் மூலமாக, 2013–2014 மற்றும் 2014–2015 ஆகிய இரண்டு ஆண்டுகளில் நீதித்துறை அமைப்புகளை மேம்படுத்திட 57.33 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் நீதி நிருவாகத்திற்கென 783.02 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சாலை பாதுகாப்பு**

16. சாலை விபத்துகளைத் தடுப்பதற்கு இந்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. **மாவட்ட அளவிலான சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை மேலும் முனைப்புடன் நடத்திடும் வகையில் அதற்கு ஒதுக்கப்படும் நிதி வரும் 2014–2015 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு மடங்காக உயர்த்தப்படும். சாலைப் பாதுகாப்பு**

**நிதிக்கென, 2014–2015 ஆம் ஆண்டிற்கு, 65 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அத்துடன் சாலை விபத்துக்கள் அதிகம் நடைபெறும் பகுதிகளைக் கண்டறிந்து அத்தகைய கரும்புள்ளிப் பகுதிகளில் (Black Spots), உரிய கட்டுமானம் தொடர்பான திருத்தப் பணிகளை மேற்கொள்ள சிறப்பு திட்டம் ஒன்று 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத்துறையால் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்காக 150 கோடி ரூபாய், 2014–2015 ஆம் ஆண்டில் ஒதுக்கப்படும். ஒரு நிதியாண்டில், அதிகபட்ச நிதியாக சாலைப் பாதுகாப்புக்கென 215 கோடி ரூபாயை ஒரு மாநில அரசு ஒதுக்கியிருப்பது இந்தியாவிலேயே இதுவே முதல் முறையாகும்.**

**நிர்வாக ஆளுமை (Governance)**

**17.** அரசு சார்ந்த சேவைகளைத் திறம்படவும், வெளிப்படையான முறையிலும் அளிப்பதற்கு இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ்கள் வழங்குவது உள்ளிட்ட அரசுச் சேவைகளை, பொதுச் சேவை மையங்கள் மூலமாக வழங்குவதற்கான மின் ஆளுமை மாவட்டத் திட்டம், 66.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2013–2014 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளில் 2,100–க்கும் மேலான பொதுச் சேவை மையங்கள் தனியார்–பொது பங்களிப்பு முறையிலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் தற்போது இயங்கி வருகின்றன. **கூடுதலாக, 2,000 பொதுச் சேவை மையங்கள் தனியார்–பொது பங்களிப்பு முறையில், 2014–2015 ஆம் ஆண்டில் தொடங்கப்படும். அனைத்துக் கிராமங்களிலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ அல்லது கிராம ஊராட்சிகள் மூலமாகவோ பொதுச் சேவை மையங்கள் தொடங்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும்.**

**18.** நகர்ப்புரங்களில் சொத்து வரி, மின்கட்டணம், குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் கட்டணம் உள்ளிட்ட பல்வேறு வரிகளையும், கட்டணங்களையும் பொது மக்கள் ஒரே இடத்தில் செலுத்திட வசதியாக, சென்னை மாநகரத்தில் பத்து இடங்களில் நகர்ப்புர பொதுச் சேவை மையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் விரைவில் தொடங்கி வைக்க உள்ளார்கள். இந்த பொதுச் சேவை மையங்கள் பொது மக்களுக்கான மின்னணுச் சேவைகளையும், பிற சேவைகளையும் வழங்கும். **சென்னை மாநகரத்தில் மேலும் இது போன்ற 200 பொதுச் சேவை மையங்கள் தொடங்கப்படுவதுடன் மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேருராட்சிகளுக்கும் இத்தகைய வசதிகள் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.** தகவல் தொழில்நுட்பத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்ட மின் ஆளுமைச் சங்கங்கள் மூலம் இந்தப் பொதுச் சேவை மையங்கள் நிருவகிக்கப்படும். இது போன்ற அமைப்பு ரீதியிலான நடவடிக்கைகள் மூலமாக, நிருவாகத்திலும் பொதுச் சேவைகள் அளிப்பதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படும் என்று நம்புகிறேன்.

**19.** மனுநீதி முகாம்கள் உட்பட மக்கள் குறைதீர்க்கும் வழிமுறைகள் மீது தொடர்ந்து இந்த அரசு கவனம் செலுத்தும். இந்த வகையில், அனைத்து கிராமங்களிலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவைகள் வழங்குவதன் மூலம் 'அம்மா திட்டம்' பாராட்டத்தக்க ஒரு முயற்சியாகக் கருதப்படுகிறது. வருவாய்த்துறையின் பணிகளை பொதுமக்களுடைய இல்லங்களுக்கே கொண்டு சேர்ப்பதுடன், அவர்களுடைய குறைகளை விரைவாகத் தீர்ப்பதிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை இத்திட்டம் ஏற்படுத்தியுள்ளது. மக்கள் குறை தீர்க்கும் வழிமுறைகளைத் திறம்படச் செயல்படுத்துவதன்மூலம் பொதுச் சேவைகள் சிறந்த முறையில் அளிக்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும்.

**தமிழ் வளர்ச்சி**

**20.** கடந்த மூன்று ஆண்டுகளில், இந்த அரசு **104.79** கோடி ரூபாயை தமிழ் மொழி வளர்ச்சிக்காக ஒதுக்கியுள்ளது. **2013–2014** ஆம் ஆண்டில், பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும், விருதுகள், பரிசுகள் ஆகியவற்றை அளித்திடவும் **46.73** கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு **31.61** கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டிற்கு, இப்பல்கலைக்கழகத்திற்கு **6.55** கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். **2014–2015** ஆம் ஆண்டுக்கு **39.29** கோடி ரூபாய் தமிழ் வளர்ச்சிக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

**வருவாய் நிருவாகம்**

**21.** நடப்பாண்டில் மொத்த மழை அளவில் 20 சதவீதம் குறைபாடு ஏற்பட்டுள்ளதால், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்த ஆண்டிலும் தமிழகம் வறட்சி நிலையைச் சந்தித்து வருகிறது. கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் இந்த அரசு, தற்போது ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளித்திட முழுமையாக முனைந்துள்ளது. வரும் கோடைப் பருவத்தில் ஏற்படவுள்ள குடிநீர்ப் பற்றாக்குறை, கால்நடைத் தீவனத் தட்டுப்பாடு ஆகியவற்றைப் பற்றியும், அதைச் சமாளிக்கத் தேவையான நிதி ஆதாரங்கள் பற்றியும், இந்த அரசால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் **குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கவும், கால்நடைகளுக்கான தீவனத் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காகவும் 681 கோடி ரூபாய் அளவிலான நிவாரணத் தொகுப்பை இந்த அரசு வழங்கும். இதில் 189 கோடி ரூபாய் மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும், 492 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளிடம் உள்ள நிதியிலிருந்தும், செயல்முறையில் உள்ள**

**திட்டங்களிலிருந்தும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்தப்படும்.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி எடுக்கப்பட்டுள்ள இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம், மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை திறப்படச் சமாளிக்க முடியும் என நம்புகிறேன்.

22. கடந்த 15.5.2013 அன்று சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு 1,481 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 'கடற்கரை இயற்கைச் சீற்ற ஆபத்துக் குறைப்புத் திட்டம்' தொடங்கப்பட்டுள்ளது. அவசரகால சுனாமி மறுவாழ்வுத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ள நிலையில், தமிழக அரசுக்கும் உலக வங்கிக்கும் இடையிலான ஒத்துழைப்பின் அடுத்த கட்டமாக இப்பெருந்திட்டம் விளங்கும். முன்னெச்சரிக்கை அமைப்புகளை 439 கடற்கரையோர கிராமங்களில் ஏற்படுத்துதல், வெளியேற்றப்படும் மக்கள் தங்குவதற்கான பல்வகைப் பயன்பாடுடைய தங்குமிடங்களை அமைத்தல், கம்பங்கள் வாயிலாகச் செல்லும் மின்சாரக் கம்பிகளைத் தரைக்குக் கீழ் கம்பிவட வழியாகக் கொண்டு செல்லுதல் உள்ளிட்ட பல முக்கிய அம்சங்கள் இத்திட்டத்தில் அடங்கும். இந்தத் திட்டத்திற்காக, 2014–2015 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 106.29 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

23. **பொதுமக்களுக்குச் சேவைகளை மேலும் திறம்பட அளிப்பதற்காக, 2014–2015 ஆம் ஆண்டில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் உள்ள பல்வேறு பிரிவுகள் கணினிமயமாக்கப்படும். வருவாய்த் துறையை கணினிமயமாக்கும் இந்த அரசின் முயற்சியின் தொடர்ச்சியாக, எஞ்சியுள்ள 4,827 கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் 300 குறுவட்ட நில ஆய்வாளர்களுக்கும் வரும் நிதியாண்டில் மடிக்கணினிகள் வழங்கப்படும். 'இணைய நில ஆவண மேலாண்மைத் திட்டம்' ஒன்றும் புதிதாகத் தொடங்கப்படும். இதுபோன்றே,**

**மலைப்பாங்கான நீலகிரி மாவட்டத்தின் சிறப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, உதகமண்டலத்தைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய வருவாய்க் கோட்டம் ஒன்று உருவாக்கப்படும்.**

**வேளாண்மை**

24. மொத்த வேளாண் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரித்து, மாநிலத்தில் இரண்டாவது பசுமைப் புரட்சியை உருவாக்கிட வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னதக் குறிக்கோளை எட்டிட, இந்த அரசு எடுத்துவரும் முயற்சிகள் பலன் அளிக்கத் தொடங்கியுள்ளன. இதன் விளைவாக, நெல், கரும்பு, பருத்தி, பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்ற முக்கியப் பயிர்களின் உற்பத்தித் திறன் உயர்ந்து வருகிறது. பண்ணை அளவிலான உற்பத்தியையும், விவசாயிகளின் வருவாயையும் உயர்த்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்த நோக்கத்துடன், **2014–2015 ஆம் ஆண்டில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 323 கோடி ரூபாய் செலவில் பல்வேறு துணைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.** 2014–2015 ஆம் ஆண்டில், திருந்திய நெல் சாகுபடி முறை, மேலும் மூன்று இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு விரிவுபடுத்தப்படும். வரும் நிதியாண்டில், நவீன கரும்பு சாகுபடி முறை மேலும் 12,500 ஏக்கர் பரப்பளவிற்கு விரிவுபடுத்தப்படும். சர்க்கரை ஆலைகளுடன் இணைந்து கரும்பு விவசாயிகளிடையே இந்த சாகுபடி முறையையும், சொட்டுநீர்ப் பாசன முறையையும் பிரபலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசின் முயற்சிகளால், நாற்று நடவு துவரை சாகுபடியின் பரப்பளவு 97,813 ஏக்கராக உயர்ந்துள்ளது. இது வரும் நிதியாண்டில் 1.3 இலட்சம் ஏக்கராக உயர்த்தப்படும். இதுபோன்றே, 2013–2014 ஆம் ஆண்டில் 9,905 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட துல்லியப் பண்ணை சாகுபடி, 2014–2015 ஆம் ஆண்டில் மேலும்

11,000 ஏக்கர் பரப்பளவிற்கு விரிவுபடுத்தப்படும். உற்பத்தித் திறனை உயர்த்தி விவசாயிகளுக்குக் கூடுதல் பயன் கிடைக்க இந்த முயற்சிகள் பெரிதும் உதவும்.

25. நீர்ப் பயன்பாட்டுத் திறனை உயர்த்துவதற்காக, நீர்ச் சேமிப்பிற்கும், நுண்ணீர்ப் பாசனத்திற்கும் இந்த அரசு பெரும் ஊக்கம் அளித்து வருகிறது. நீர்வள நிலவளத் திட்டம், தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றுடன் மாநில அரசு நிதியையும் ஒருங்கிணைத்து, கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் மூன்று இலட்சம் ஏக்கர் பரப்பு நுண்ணீர்ப் பாசனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. **2014–2015 ஆம் ஆண்டில், பல்வேறு திட்ட நிதிகளை ஒருங்கிணைத்து 400 கோடி ரூபாய் செலவில் 1.30 இலட்சம் ஏக்கர் பரப்பளவு நுண்ணீர்ப் பாசனத்தின் கீழ் கொண்டுவரப்படும்.**

26. வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், வேளாண் பணிகளுக்கான செலவினத்தைக் குறைக்கவும் ‘வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டம்’ முனைப்போடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2014–2015 ஆம் ஆண்டில், இதனை மேலும் ஊக்குவிப்பதற்காக 100 கோடி ரூபாய் செலவிடப்படும்.**

27. விவசாயிகளின் வருவாயை உயர்த்தும் நோக்கத்துடன் 22 மாவட்டங்களில் தேசியத் தோட்டக்கலை இயக்கத்தில், அதிக வருவாய் தரக்கூடிய தோட்டப் பயிர்களைப் பயிர் செய்தல் மற்றும் பயிர் பன்முனையாக்கல் (crop diversification) ஆகியன ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. பிற மாவட்டங்களில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட மற்ற திட்டங்களில் உள்ள நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி இந்த நோக்கம் எய்தப்பட்டு வருகின்றது. **வரும் நிதியாண்டில், 115 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேசியத் தோட்டக்கலை இயக்கம் மேற்கூறிய 22 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.**

**எஞ்சியுள்ள மாவட்டங்களில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் நிதியைப் பயன்படுத்தி, தோட்டப்பயிர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.** உயர் அடர்த்தி சாகுபடி, பாதுகாக்கப்பட்ட சாகுபடி முறை (protected cultivation), மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் காய்கறி சாகுபடித் தொகுப்புகளை அமைத்தல், இத்தொகுப்புகளை பண்ணைப் பசுமை காய்கறிக் கடைகளோடு, குறிப்பாக, கூட்டுறவு அமைப்புகள் மூலமாக ஒருங்கிணைத்தல் ஆகியன இத்திட்டத்தின் முக்கியக் கூறுகளாக இருக்கும்.

**28.** இதுவரை செயல்படுத்தப்பட்டு வந்த தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்திற்குப் பதிலாக, மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தையோ அல்லது பருவ நிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தையோ செயல்படுத்த மத்திய அரசு எடுத்துள்ள ஒருதலைப்பட்சமான முடிவால், விவசாயிகள் அதிக காப்பீட்டுத் தொகையைச் செலுத்த வேண்டிய நிலை உருவாகி, பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். விவசாயிகளின் இந்தக் கூடுதல் சுமையைக் குறைத்திடும் வகையில், கூடுதல் காப்பீட்டுத் தொகையை மத்திய அரசு, மாநில அரசுடன் பகிர்ந்துகொள்ள வேண்டுமென இந்த அரசு வலியுறுத்தி வருகிறது. **2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், பயிர்க் காப்பீட்டிற்காக 242.54 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**29.** தற்போது மாநிலத்தில் **3.34** இலட்சம் ஏக்கர் பரப்பில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு, சுமார் நான்கு இலட்சம் பருத்தி பேல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நமது மாநிலத்தில் உள்ள **1,948** நூற்பாலைகளுக்கு ஆண்டுதோறும் **110** இலட்சம் பருத்தி பேல்கள் தேவைப்படுகின்றன. **நமது மாநிலத்தில் பருத்தி உற்பத்தி போதிய அளவில் இல்லாத காரணத்தால், 50 கோடி ரூபாய் தொடக்க**

**ஒதுக்கீட்டுடன் தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் என்ற ஒரு பெருந்திட்டம் தொடங்கப்படும். பருத்தி உற்பத்தித் திறனையும் மொத்த உற்பத்தியையும் உயர்த்துவதில் இந்த இயக்கம் கவனம் செலுத்தும். மத்திய அரசின் பருத்தி தொழில்நுட்ப இயக்கத்தில் உள்ள நிதியும் இந்த மாநில இயக்கத்துடன் ஒருங்கிணைக்கப்படும். இந்த இயக்கத்தின் மூலம், 2014–2015 ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 3.70 இலட்சம் ஏக்கர் பரப்பை பருத்திப் பயிர் சாகுபடியின் கீழ் கொண்டு வரவும், வரும் ஐந்து ஆண்டுகளில் இதை ஆறு இலட்சம் ஏக்கராக உயர்த்தவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

30. 2013–2014 ஆம் ஆண்டில் கூட்டுறவு அமைப்புகள் மூலம் பயிர்க் கடன் வழங்குவதற்கான இலக்கு 4,500 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 3,948 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 8.9 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். **2014–2015 ஆம் ஆண்டில் கூட்டுறவு அமைப்புகளுக்கான பயிர்க் கடன் இலக்கு முன் எப்போதும் இருந்திராத அளவாக 5,000 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்.** பயிர்க் கடனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு, வட்டியில்லாக் கடன் வழங்குவதற்கான முழு வட்டிச் சலுகையை இந்த அரசு அளித்து வருகிறது. 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், இந்த வட்டிச் சலுகைக்காக 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கால்நடை பராமரிப்பு**

31. விவசாயிகளுக்குக் கூடுதல் வருவாயை அளிக்கும் முக்கிய வேளாண் சார்ந்த துறையாக கால்நடை வளர்ப்பு உள்ளது. கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளியோருக்கு விலையில்லாக் கறவை பசுக்கள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வழங்கும் புதுமையான

திட்டத்தைத் தொடங்கிச் செயல்படுத்தி வருவதன் மூலம், புறக்கணிக்கப்பட்ட இத்துறைக்கு மிகுந்த முக்கியத்துவத்தை இந்த அரசு அளித்துள்ளது. **வரும் நிதியாண்டில் 43.65 கோடி ரூபாய் செலவில் மேலும் 12,000 பயனாளிகளுக்கு விலையில்லாக் கறவை பசுக்கள் வழங்கப்படும். அதேபோல், 1.5 இலட்சம் பயனாளிகளுக்கு விலையில்லாச் செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் வழங்கப்படும். இதற்கென, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 198.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**32.** கால்நடைப் பராமரிப்புத் துறையின் கட்டமைப்பை வலுப்படுத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது. **வரும் நிதியாண்டில் 100 கால்நடை துணை மையங்கள், குறிப்பாக பின்தங்கிய மாவட்டங்களில், கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்படும். நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் 80.05 கோடி ரூபாய் செலவில் 227 புதிய கட்டடங்கள் கட்டப்படும்.**

**33.** கால்நடைத் தீவன உற்பத்திக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கும் நோக்குடன், கடந்த மூன்று ஆண்டுகளில் **65** கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் மாநிலத் தீவன உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அரசின் தீவிர முயற்சியால், **63,542** ஏக்கர் அளவிலான விவசாயிகளின் சொந்த நிலம் தீவனப் பயிர் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. **இத்திட்டம், வரும் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**34.** மாநிலத்தில் கோழி வளர்ப்புத் தொழிலில் வளர்ச்சி பெறாத பின்தங்கிய பகுதிகளில், இத்தொழிலை ஊக்குவிப்பதற்காக, ஆண்டுதோறும் **25** கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் ஒரு புதிய திட்டம்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில், தலா 1,000–லிருந்து 5,000 பறவைகள் கொண்ட 514 கறிக்கோழிப் பண்ணைகளும், தலா 250–லிருந்து 500 பறவைகள் கொண்ட 730 நாட்டுக்கோழிப் பண்ணைகளும் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. **2014–2015 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திட 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

35. மத்திய அரசின் நிதியுதவியுடன் 15 மாவட்டங்களில் கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **கால்நடை இறப்பின்போது விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய, மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில், எஞ்சியுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் வரும் நிதியாண்டில் 12 கோடி ரூபாய் செலவில் கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.**

36. இந்த அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளால், தமிழ்நாட்டில் இரண்டாவது வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் கனவு நனவாகியுள்ளது. இதன் விளைவாக, மாநிலத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புகளின் பால் கொள்முதல் அளவு உயர்ந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில், ஆவின் நிறுவனத்தின் மூலம் செயல்பட்டு வரும் பல்வேறு பால் பண்ணைகளின் பால் பதப்படுத்தும் கட்டமைப்புகள் 258.61 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. பெரம்பலூரில் 36.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பால் பண்ணை அமைப்பதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. **2014–2015 ஆம் ஆண்டில் நபார்டு மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் உள்ள நிதியைப் பயன்படுத்தி பல்வேறு பால் பண்ணைகளின் திறனை உயர்த்த 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** பால் உற்பத்தித் துறைக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 70.67 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீனளம்**

**37.** இந்த அரசு மீனவர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. மீன்பிடிப்பு குறைவாக உள்ள காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் நிவாரண உதவி இந்த அரசால் ஏற்கெனவே உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 47.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மீன்பிடிப்பு தடை செய்யப்படும் காலங்களில் வழங்கப்படும் நிவாரணத்திற்காக 105 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 184.72 கோடி ரூபாய் செலவில், மானிய விலையில் மீனவர்களுக்கு டீசல் மற்றும் மண்ணெண்ணையை இந்த அரசு வழங்கி வருகிறது. இத்திட்டம் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். ஐந்து கோடி ரூபாய் மானிய ஒதுக்கீட்டுடன் ஆழ்கடலில் சூரை மீன் பிடிப்பதற்காக மீன்பிடிப் படகுகளை நவீனப்படுத்த மீனவர்களுக்கு உதவும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**38.** கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தில் உள்ள மீன்பிடிக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சென்னை, கடலூர், பழையாறு, நாகப்பட்டினம், தூத்துக்குடி, சின்னமுட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள மீன்பிடித் துறைமுகங்கள், மொத்தம் 264.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. பூம்புகாரில் 78.50 கோடி ரூபாய் செலவில் புதிய மீன்பிடித் துறைமுகமும், 152 கோடி ரூபாய் மொத்த செலவில் பல்வேறு இடங்களில் 23 மீன் இறங்கு தளங்களும் கட்டப்பட்டு வருகின்றன. **2014–2015 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினத்தில் உள்ள மீன்பிடித் துறைமுகம் 60 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். அத்துடன், தூத்துக்குடி மாவட்டம்**

**புன்னக்காயலில் தாமிரபரணி ஆற்றின் முகத்துவாரம் 18 கோடி ரூபாய் செலவில் நிலைப்படுத்தப்படும்.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தவாறு இராமேஸ்வரத்தில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்தும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

**பொது விநியோகத் திட்டம்**

**39.** அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய முன்மாதிரியான பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக, இந்த அரசு உணவுப் பாதுகாப்பை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உறுதி செய்து வருகிறது. மாநிலத்தில் உள்ள ஒரு கோடியே 84 இலட்சம் அரிசி அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இத்தோடு, சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தில் மானிய விலையில் பருப்புகளும், சமையல் எண்ணெயும் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, 281 கோடி ரூபாய் செலவில் அனைத்து அரிசி அட்டைதாரர்களுக்கும் நியாயவிலைக் கடைகள் மூலமாக சிறப்புப் பொங்கல் பரிசுப் பைகள் வழங்கப்பட்டன. **2013–2014 ஆம் ஆண்டிற்கு உணவு மானியமாக 4,900 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது திருத்திய மதிப்பீட்டில் 5,000 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டிற்கு இந்த ஒதுக்கீடு 5,300 கோடி ரூபாயாக மேலும் உயர்த்தப்படும்.**

**40.** விலைவாசியைக் கட்டுப்படுத்த 297 அம்மா உணவகங்களைத் தொடங்கி நடத்துவதுடன் அம்மா குடிநீர்த் திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். **இது தவிர, மேலும் ஒரு முன்முயற்சியாக ஏற்கெனவே கூட்டுறவுத் துறையால் நடத்தப்படும் 210 மருந்தகங்களுடன் கூடுதலாக 100 ‘அம்மா மருந்தகங்கள்’ புதியதாகத் தொடங்கப்படும். இதற்கென**

**20 கோடி ரூபாய் மாநில விலை நிலைப்படுத்தும் நிதியத்திலிருந்து பயன்படுத்தப்படும்.**

41. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் 23 நெல் அரவை ஆலைகளில், 14 ஆலைகள் 58.86 கோடி ரூபாய் செலவில் ஏற்கெனவே நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன. **2014–2015 ஆம் ஆண்டில், 36 கோடி ரூபாய் செலவில் எஞ்சியுள்ள ஒன்பது நெல் அரவை ஆலைகளும் நவீனமயமாக்கப்படும்.** நெல் அரவை ஆலைகளின் திறனை மேம்படுத்துவதோடு, பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் தரத்தையும் உயர்த்த இந்த நடவடிக்கை பெரிதும் உதவும்.

**நீர்ப் பாசனம்**

42. உலக வங்கியின் நிதியுதவியோடு 745.49 கோடி ரூபாய் செலவில், 'அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. 104 அணைகளை நான்கு கட்டங்களில் புனரமைப்பதை இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதற்காக உலக வங்கியோடு திட்ட ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு ஒரு திட்டமேலாண்மை அலகும் நிறுவப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை 28 அணைகளில் பணிகளை மேற்கொள்வதற்கான நீரியல் ஆய்வுகளும் முடிக்கப்பட்டுள்ளன. **2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கென 329.65 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

43. திருவாரூர் மாவட்டத்தில் காவேரி, வெண்ணாறு துணை வடிநிலப் பகுதிகளில் 19.82 கோடி ரூபாய் செலவில் 1,335 செயற்கை நீர்ச் செறிவூட்டல் குழாய்களை அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கும். நபார்டு வங்கியின் நிதியுதவியோடு, 2013–2014 ஆம் ஆண்டில் 209.89 கோடி ரூபாய் செலவிலான

32 திட்டங்களைச் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. **2014–2015 ஆம் ஆண்டில், நபார்டு நிதியுதவித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பாசனப் பணிகளுக்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்றே, பாரம்பரிய நீர்நிலைகளைச் சீரமைப்பதற்காக 160 பணிகளை மேற்கொள்ள, 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 86.28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

44. நீர்ப் பயன்பாட்டுத் திறனை உயர்த்தி, வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதை குறிக்கோளாகக் கொண்ட நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், 2013 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை 1,823.72 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை மேலும் 18 மாதங்கள் கால நீட்டிப்பு கிடைத்துள்ளது. **2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக 489.49 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

45. மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைப்பதற்கு இந்த அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது. **2014–2015 ஆம் ஆண்டில், மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திட 119.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் நீர்ப் பாசனத் துறைக்காக 3,669.79 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**சுற்றுச்சூழல் மற்றும் வனம்**

46. 'தமிழ்நாடு பல்லுயிரினப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டம்' 686 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2014–2015 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 119 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு வனப் பாதுகாப்புத் திட்டத்தின்

இரண்டாவது கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வனப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் பயனை நிலைக்கச் செய்யும் வகையில், 52.11 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இரண்டாண்டுத் திட்டம் ஒன்றையும், 2013–2014 ஆம் ஆண்டிலிருந்து இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. 2014–2015 ஆம் ஆண்டில் 28.25 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

47. 2013–2014 ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாய் செலவில் சேத்துப்பட்டு ஏரியை புனரமைக்கும் பணிகள் உள்ளிட்ட காப்பு பணிகளுக்காக சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான நிதியத்தில் 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2014–2015 ஆம் ஆண்டில் இந்த நிதியத்திற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். சேத்துப்பட்டு ஏரிப் பணிக்காகத் தேவைப்படும் மீதத் தொகை 30 கோடி ரூபாய் போக எஞ்சிய தொகை, சென்னையிலும், இதர நகரங்களிலும் உள்ள ஏரிகள், நீர்நிலைகளைச் சீரமைக்கவும், பிற பணிகளை மேற்கொள்ளவும் செலவிடப்படும்.

48. அதிகரித்துவரும் மக்கள் தொகையும், வேகமாக விரிவடைந்துவரும் கட்டமைப்புத் தேவைகளும் நகர்ப்புர சுற்றுச்சூழலை பெருமளவு பாதித்துள்ளன. சென்னையில் உள்ள ஆறுகளில் கழிவு நீர் சேரும் 337 இடங்களில், 179 இடங்களில் அதைத் தடுத்து, இந்த ஆறுகளைச் சீரமைப்பதற்காக 150 கோடி ரூபாய் செலவில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் வரும் 2015–ல் முடிவடையும். 163 கோடி ரூபாய் செலவில் 2014–2015 ஆம் ஆண்டில் மீதமுள்ள 158 இடங்களிலும் பணிகள் தொடங்கப்படும். **கூவம் நதியை முழுமையாகச் சீரமைத்து மீட்டெடுப்பதற்கான ஒரு பெரும் திட்டம் வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும். மொத்தம் 3,833.62 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இந்தப் பெரும் திட்டம் ஐந்து ஆண்டுகளில்**

**செயல்படுத்தப்படும். பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கவும் மறுகுடியமர்வு செய்யவும் 2,077.29 கோடி ரூபாய் செலவிடப்படும். இத்திட்டத்தை, 'சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை' ஒருங்கிணைப்பு அமைப்பாக இருந்து செயல்படுத்தும். இத்திட்டத்திற்காக 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**மின்சாரம்**

**49.** நமது மாநிலத்தின் ஒட்டுமொத்தச் சமூகப் பொருளாதார வளச்சிக்கு நம்பகத்தன்மையுடைய மின் வழங்கல் இன்றியமையாததாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் 2,500 மெகாவாட் அளவிலான புதிய மின் உற்பத்தித்திறன், கூடுதலாக இந்த அரசால் சேர்க்கப்பட்டுள்ளது. நிலுவையிலிருந்த அனல் மின் திட்டங்களை விரைவுபடுத்த இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளால் மட்டுமே இது சாத்தியமானது. நீண்ட கால அடிப்படையில், 3,330 மெகாவாட் மின் கொள்முதல் செய்ய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுபோன்றே, நடுத்தரக் கால அளவில் மின் கொள்முதல் செய்ய 500 மெகாவாட் அளவிற்கு ஒப்பந்தம் போடப்பட்டு மின்சாரம் வாங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இத்தகைய சீரிய முயற்சிகளின் காரணமாகவே, மாநிலத்தில் மின் பற்றாக்குறை வெகுவாகக் குறைக்கப்பட்டு தற்போது மின் தடையும் மிகக் குறைந்த அளவிலும், அடிக்கடி நிகழாமலும் உள்ளது. இதனால், மாநிலத்தில் தடையில்லாத தரமான மின்விநியோகம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. முன்னெப்போதும் இருந்திராத உயர் அளவாக, 29.1.2014 அன்று 12,799 மெகாவாட் உச்சத் தேவையை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் நிறைவு செய்ய இயன்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**50.** மின்கடவு மற்றும் விநியோகக் கட்டமைப்பை வலுப்படுத்துவது இந்த அரசின் மற்றுமொரு முன்னுரிமைப் பணியாகும். மின்கடவு அமைப்பை, குறிப்பாக சென்னை மாநகரத்தில் வலுப்படுத்திட, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் 3,572 கோடி ரூபாய் நிதியுதவியுடன் 5,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நுகர்வோரின் தேவையை நிறைவு செய்யவும், மின் விநியோக அமைப்பில் உள்ள மின் அழுத்தத்தை மேம்படுத்தவும், 509.88 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள 50 துணை மின்நிலையங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 30.12.2013 அன்று தொடங்கிவைக்கப்பட்டது. 1,192 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தப்புகுண்டு, ஆனைக்கடவு மற்றும் ராசிபாளையம் ஆகிய இடங்களில் காற்றாலை மின்சாரத்தை வெளியேற்றத் தேவையான 400 கிலோவாட் மின்தடத்தோடு கூடிய 400 கிலோவாட் துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. நாட்டின் பிற பகுதிகளிலிருந்து மின்சாரத்தைப் பெற்றிட, திருவலத்தில், உயர் அழுத்த மின்தடத்தோடு கூடிய 400 கிலோவாட் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணியும் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. **கே.எப்.டபுள்யூ. (KfW) என்ற ஜெர்மன் நாட்டு நிதி நிறுவனத்தின் உதவியோடு, காற்றாலை மின்சாரத்தை வெளியேற்றிடத் தேவையான பசுமை மின்சக்தி வழித்தடங்களை 1,593 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கவும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.**

51. 2013–2014 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு 4,970 கோடி ரூபாய் மின் மானியமாக இந்த அரசால் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, பங்கு மூலதன உதவியாக மேலும் 2,153 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய உதவியைத்

தொடர்ந்திட **2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மின் மானியமாக 5,400 கோடி ரூபாயும், பங்கு மூலதன உதவியாக 2,000 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.** நிதிச் சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, அரசால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் 6,353 கோடி ரூபாய் அளவிலான கடன் தொகையில், 2013–2014 ஆம் ஆண்டில் 1,000 கோடி ரூபாயை இந்த அரசு ஏற்றுள்ளது. **2014–2015 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் கடன் பொறுப்பில் மேலும் 2,000 கோடி ரூபாய் அரசால் ஏற்றுக் கொள்ளப்படும். எஞ்சிய கடன் தொகையை வரும் ஆண்டுகளில் அரசு ஏற்றுக் கொள்ளும்.**

## நெடுஞ்சாலைகள்

52. சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டிற்கு போதுமான நிதியை இந்த அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 2,032 கோடி ரூபாய், திருத்திய மதிப்பீடுகளில் 2,500 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. **2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், இந்த ஒதுக்கீடு 2,800 கோடி ரூபாயாக மேலும் உயர்த்தப்படும். 2014–2015 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில், 1,500 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தவும், 3,500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.**

53. இரயில்வே பாலப் பணிகள் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் 69 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாலப் பணிகளில், 14 பணிகள் வரும் மார்ச் மாதத்தில் நிறைவுறும். மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. 2014–2015 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக 683.63 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**54.** தொழிற்சாலைகள் உள்ள பகுதிகளில் சாலைக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான பெரும் முயற்சி ஒன்று இந்த அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் அதிகமான சரக்குந்து போக்குவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள 120 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் 240.76 கோடி ரூபாய் செலவில் மறு கட்டமைப்பு செய்யப்பட்டு வருகின்றன. 462.42 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வரும், ஒரகடம் தொழில் பகுதி வழித்தடத் திட்டத்தின் முதல் கட்டப்பணி நிறைவடைய உள்ளது. 86.65 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இத்திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணியும் 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

**55.** சென்னை வெளிவட்டச் சாலையின் முதல் கட்டப் பணிகள் 1,081.40 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு நிறைவடையும் தருவாயில் உள்ளன. இச்சாலை விரைவில் மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கான பணிகளும் 1,075 கோடி ரூபாய் செலவில் வரும் மார்ச் மாதம் முதல் தொடங்க உள்ளது. பொதுத்துறை–தனியார் துறை பங்கேற்பின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இவ்விரு திட்டங்களும், தொலைநோக்குப் பார்வை 2023–ன் குறியீடுகளை எய்துவதில் தனியார்துறையின் நிதி ஆதாரங்களை பயன்படுத்தும் இவ்வரசின் முயற்சிகளுக்கு சீரிய எடுத்துக்காட்டுகளாகும்.

**56. இந்த அரசு செயல்படுத்த முனைந்துள்ள பெரும் திட்டங்களுள் சென்னை சுற்றுவட்டச் சாலையும் ஒன்றாகும். ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் கடன் உதவியோடு இத்திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு உத்தேசித்துள்ளது. இதுதவிர, சென்னை மாநகரப் பகுதிகளில், பாலங்கள், சாலைகள், இரயில்வே**

**மேம்பாலங்கள் ஆகியவற்றிற்கான 17 திட்டங்களை நிறைவேற்ற 2,000 கோடி ரூபாய் நிதியுதவியை ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து பெற்றுப் பணிகளைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

57. 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டவாறு, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் கீழ், 9,061 கோடி ரூபாய் செலவில் முக்கியச் சாலைகளை மேம்படுத்த 2,049 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான பணிகள் விரைவில் தொடங்க உள்ளன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**போக்குவரத்து**

58. பொதுமக்களுக்கான போக்குவரத்து வசதியை மேம்படுத்த 2011 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் 19,167 ஆக இருந்த பேருந்துச் சேவைகளை, 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 20,634 ஆக இந்த அரசு உயர்த்தியுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் 697.96 கோடி ரூபாய் செலவில் 3,994 புதிய பேருந்துகள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இது போக்குவரத்து தொடர்புகளை மேம்படுத்தியுள்ளதோடு, நம்பகத் தன்மையுள்ள போக்குவரத்து வசதிகளை உறுதி செய்துள்ளது. **2014–2015 ஆம் ஆண்டில் ஜவஹர்லால்நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் 200 கோடி ரூபாய் செலவில் பழைய பேருந்துகளை மாற்ற 1,000 புதிய பேருந்துகள் வாங்கப்படும்.**

59. தொடர்ந்து டீசல் விலை உயர்த்தப்பட்டு வருவது, பெரும் அளவில் ஏழை எளியோருக்குச் சேவை ஆற்றிவரும் மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு பெரும் நிதிச் சுமையை ஏற்படுத்தியுள்ளது. கூடுதல் எரிபொருள் செலவினத்தை ஈடுசெய்ய

மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு மானியமாக 2013–2014 ஆம் ஆண்டில் 500 கோடி ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர, பங்கு மூலதன உதவியாகவும் 350 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. **2014–2015 ஆம் ஆண்டிற்கு டீசல் மானியமாக 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

60. போக்குவரத்து அமைப்புகளின் திறனை மேம்படுத்த நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட போக்குவரவு பேருதவியாக இருக்கும். **சென்னை மாநகரத்தில் ஒரு புதிய நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்பைச்** (Intelligent Transport System) **செயல்படுத்த இந்த அரசு உத்தேசித்துள்ளது. சென்னை மாநகரப் போக்குவரத்து அமைப்பிற்கான இந்த உயர் தொழில்நுட்பத் தீர்வைச் செயல்படுத்துவதற்கான முதல் கட்ட ஆய்வும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியும் விரைவில் மேற்கொள்ளப்படும். சென்னை மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலுக்கு முக்கியத் தீர்வாக இது அமையும்.**

61. சென்னை மாநகரத்தில் பன்முறை போக்குவரத்து அமைப்பு (Multi Modal Transport System) நிறுவப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், மோனோ இரயில் திட்டம், செயல்படுத்தத் தக்க முறையில் திருத்தி அமைக்கப்பட்டு, இதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **சென்னை மாநகரத்தின் பேருந்துப் போக்குவரத்தின் திறனை உயர்த்தவும், அதை பொதுமக்கள் எளிதாகப் பயன்படுத்த ஏதுவாகவும், ஜி.பி.எஸ். வசதியுடன் கூடிய ஒருங்கிணைந்த பேருந்து தகவல் அமைப்பு முறை செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் அனைத்துப் பேருந்துகளின் தடம் அறிந்து, பேருந்து நிறுத்தங்களில் தகவல் அளிப்பதற்காக அனைத்து மாநகரப் பேருந்துகளிலும்**

**ஜி.பி.எஸ். கருவிகள் பொருத்தப்படும். முதல் கட்டமாக, 500 பேருந்து நிறுத்தங்களை இணைத்து, தட வரைபடங்கள், வரவிருக்கும் பேருந்து பற்றிய தகவல்களும் இதர வசதிகளும் கொண்ட பொதுத் தகவல் முறை அமைக்கப்படும். படிப்படியாக மாநகரத்தில் உள்ள அனைத்துப் பேருந்து நிறுத்தங்களுக்கும் இது விரிவுபடுத்தப்படும்.**

**தொழில்**

**62.** நமது நாட்டின் முக்கிய உற்பத்தி மையமாக தமிழ்நாடு விளங்குகிறது. தற்போதுள்ள வலுவான உற்பத்தி அடித்தளம், துணைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இணைப்பு, நல்ல கட்டமைப்பு வசதிகள், சிறந்த பணிப் பண்பாடு, திறன்மிக்க மனித ஆற்றல் ஆகியன தமிழ்நாட்டு தொழில் வளர்ச்சிக்கு வலு சேர்க்கின்றன. இவை, உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களை தொடர்ந்து கவர்ந்திழுக்கின்றன. 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல், இதுவரை 26,625 கோடி ரூபாய் அளவிற்கு மொத்த முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, 10,660 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் 10,022 பேருக்கு கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. **நமது மாநிலத்தில் தொழில் வளத்தையும் கட்டமைப்பையும் மேலும் ஊக்குவிக்க இந்த அரசு வரும் அக்டோபர் மாதத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்தும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன். இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**63.** தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான சிறப்பு சலுகைத் தொகுப்பு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பெருந் திட்டத்தின் ஒரு பகுதியாக, மாநிலம் முழுவதிலும் உள்ள 53,000 ஏக்கர் நிலம் மேம்படுத்தப்படும்.

இதில், மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படும். **ஏற்கெனவே விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ள மதுரை–தூத்துக்குடி தொழில் மேம்பாட்டு வழித்தடத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக சிறப்பு செயலாக்க முகமை (Special Purpose Vehicle) ஒன்று ஏற்படுத்தப்படும்.**

**64.** இளைஞர்களின் திறனை மேம்படுத்த காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் திறன் மேம்பாட்டு மையம் ஒன்றை சிப்காட் நிறுவனம் அமைத்துள்ளது. மேலும், **திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானிலும், திருவள்ளூர் மாவட்டம் தேர்வாய்கண்டிகையிலும், இதுபோன்ற இரண்டு மையங்கள் அமைக்கப்படும். மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்குத் தேவையான திறன் மிக்க மனித ஆற்றலை வழங்க உதவுவதுடன், நமது இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திடவும் இம்முயற்சி வழிவகுக்கும்..**

### குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்

**65.** அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கி, உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் விளங்குகின்றன. இதனைக் கருத்தில்கொண்டு, அவற்றை மேலும் வளர்ச்சியுறச் செய்யும் வகையில், இத்தொழில்களுக்கான சலுகைத் தொகுப்பு ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த அரசு, குழும வளர்ச்சி அணுகுமுறையை (cluster development) முக்கிய உத்தியாகக் கடைபிடித்து வருகிறது. மின்சாரம், கட்டமைப்பு, சுற்றுச்சூழல் குறித்த பிரச்சினைகளை மேலும் திறம்படக் கையாளுவதற்கு ஏதுவாக,

புதிய தொழிற்பேட்டைகளை அமைத்திடவும், ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகளைக் குறிப்பிட்ட பகுதிகளுக்குள் மாற்றி அமைத்திடவும், தொழில் முனைவோர் அமைப்புகளுக்கான நிதியுதவியாக 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்காக 2014–2015 ஆம் ஆண்டிற்கும் 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

66. படித்த இளைஞர்களை, முதல் தலைமுறை தொழில் முனைவோர்களாக உருவாக்கிட, புதிய தொழில் முனைவோர்–தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தை 20.2.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். இந்தத் திட்டத்திற்கு படித்த இளைஞர்களிடையே, குறிப்பாக பெண்களிடையே, நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திட 2014–2015 ஆம் ஆண்டிற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**67. குறுந்தொழில் குழுமங்களுக்கு ஆதரவளிக்கும் புதிய முயற்சியாக, மூலப் பொருள் வங்கி, விற்பனைக் கட்டமைப்பு மற்றும் பொது உற்பத்திக் கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்காக ஒவ்வொரு குழுமத்திற்கும் 2.5 கோடி ரூபாய்க்கு மிகாத வகையில் 70 சதவீத மானிய உதவி வழங்கும் புதிய திட்டத்தை இந்த அரசு தொடங்கும். முதல் கட்டமாக, இத்தகைய 10 குறுந்தொழில் குழுமங்களை அமைத்திட 2014–2015 ஆம் ஆண்டிற்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**திறன் மேம்பாடு**

68. தொலைநோக்குப் பார்வை 2023–ன் இலக்கை எய்திட திறன் மேம்பாட்டிற்கு ஊக்கம் அளிப்பது இந்த அரசு பின்பற்றும் உத்திகளுள் ஒன்றாகும். உயர் இலக்குடன் செயல்பட்டு வரும் திறன் மேம்பாட்டு இயக்கத்திற்கு 2013–2014 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய்

ஒதுக்கீடு செய்யப்பட்டது. **2014–2015 ஆம் ஆண்டிலும், இந்த இயக்கத்திற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

69. நடப்பு நிதியாண்டில் 50.89 கோடி ரூபாய் செலவில், 10 புதிய அரசு தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள் இந்த அரசால் தொடங்கப்பட்டுள்ளன. மாத உதவித் தொகையாக 500 ரூபாய், மடிக்கணினிகள், மிதிவண்டிகள், சீருடைகள், காலணிகள், பாடப்புத்தகங்கள், வரைவு உபகரணங்கள் போன்ற பல்வேறு சலுகைகளை, தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கும் இந்த அரசு விரிவுபடுத்தியுள்ளது. **இந்த மாணவர்கள் நவீனத் தொழில்நுட்பம் சார்ந்த திறன்களைப் பெறும் வகையில், கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய நிதியைப் பயன்படுத்தி, 50 கோடி ரூபாய் செலவில் மாநிலத்தில் உள்ள அரசுத் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்களும் நவீனமயமாக்கப்படும்.**

**தகவல் தொழில்நுட்பம்**

70. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளை ஊக்குவிப்பதற்கு இந்த அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது. 2012–2013 ஆம் ஆண்டில், நமது மாநிலத்தின் மொத்த மென்பொருள் ஏற்றுமதி அளவு சுமார் 65,000 கோடி ரூபாயாகும். **இளம் தொழில்முனைவோர்களுக்கு உதவும் ஒரு பெரும் முயற்சியாக, அரசால் அமைக்கப்பட்டுள்ள அனைத்து தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களிலும், 10 சதவீத இடம் தனியாக ஒதுக்கப்பட்டு அதில் தகவல் தொழில்நுட்பத் தொழிலை புதிதாகத் தொடங்குவதற்கான மையங்கள் (Incupation Centres) ஏற்படுத்தப்பட்டு, புதிய தொழில் முனைவோருக்கு 2014–2015 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும். புதிய தொழில்முனைவோர் எடுக்கும் முயற்சிகளை வெற்றிபெறச் செய்ய இந்த மையங்கள் உதவிபுரியும்.**

**கைத்தறி மற்றும் துணிநூல்**

71. மாநிலத்தின் தொழில் வளர்ச்சியிலும் வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும் ஜவுளித் தொழில் அளித்துவரும் முக்கியப் பங்களிப்பை இந்த அரசு உணர்ந்துள்ளது. **இலவச வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்திற்கு 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 499.16 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, இத்துறைக்கு அரசு தொடர்ந்து ஊக்கமளித்து வருகிறது.** அத்துடன், கைத்தறித் தொழிலுக்கான தள்ளுபடிச் சலுகைக்காக 78 கோடி ரூபாயும், கதர் அமைப்புகளுக்காக 10 கோடி ரூபாயும் 2014–2015 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

72. நெசவாளர்களுக்கு சூரிய ஒளி மின்வசதி கொண்ட, 10,000 பசுமை வீடுகளை அமைக்க இந்த அரசு 260 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த வீடுகளில் தறிகளை நிறுவுவதற்கான கூடுதல் இட வசதிக்கு வழி செய்யப்பட்டு, வீடு கட்டுவதற்கான மதிப்பீட்டுத் தொகையும் 2.60 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 168 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சி**

73. தரமுள்ள கட்டமைப்பைப் போதிய அளவில் ஏற்படுத்தி, கிராமப்புறங்களை முழுமையாக மாற்றி அமைத்திட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. கிராமப் பகுதிகளில் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, வீட்டுவசதி, சாலை இணைப்புகள், குடிநீர் வசதி, பொது பயன்பாட்டிற்கான கட்டடங்களை அமைத்துப் பராமரித்தல் போன்ற பணிகளுக்கான பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, மாநிலத்தின் வரி வருவாயில் கிராம உள்ளாட்சி அமைப்புகளின் பங்காக கணிசமான நிதி வழங்கப்பட்டு வருகிறது.

**2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பங்கீட்டிற்காக 5,168.07 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

74. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சூரிய ஒளி மின்வசதி கொண்ட பசுமை வீடுகள் திட்டம் இந்த அரசின் பாராட்டத்தக்க முயற்சிகளில் ஒன்றாகும். இத்திட்டம் வீட்டுவசதி வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, பசுமை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுவரை, இத்திட்டத்தின் கீழ் 1.8 இலட்சம் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. **வரும் ஆண்டில், 60,000 வீடுகளை அமைத்திட, 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 1,260 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** இது தவிர, **இந்திரா வீட்டுவசதித் திட்டத்தில், 2014–2015 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து ஆறாயிரம் வீடுகள் அமைக்கப்படும். இதற்கான மாநில அரசின் பங்கு மற்றும் கான்கிரீட் கூரைக்கான கூடுதல் செலவிற்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 729.69 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

75. 'தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம்' (THAI) என்ற இந்த அரசின் முன்னோடித் திட்டம், குக்கிராம அளவில் திட்டங்களை தீட்டி செயல்படுத்தும் புதுமையான அணுகுமுறை மூலமாக, கிராமங்களுக்குள் அடிப்படை வசதிகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், கிராமப்புறச் சாலைகள், தெரு விளக்குகள், மயானங்கள், குடிநீர் வழங்கல், இன்னும் பிற கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 6,770 கிராமங்களில் உள்ள 59,031 குடியிருப்புகளில் 2,180 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2014–2015 ஆம்**

**ஆண்டிலும் 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

76. கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்த முக்கியத்துவம் வழங்கும் பொருட்டு அனைத்து முக்கிய மண் சாலைகளையும், தார் சாலைகளாக தரம் உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **2014–2015 ஆம் ஆண்டில் பல்வேறு திட்ட நிதிகளை ஒருங்கிணைத்து 2,308 கோடி ரூபாய் செலவில் 9,235 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் தார் சாலைகளாக மேம்படுத்தப்படும். உள்ளாட்சி அமைப்புகளின் பராமரிப்பில் உள்ள சாலைகளில் பேருந்துப் போக்குவரத்து அதிகம் உள்ள முக்கியச் சாலைகள் மேம்படுத்தப்பட்டு இதர மாவட்டச் சாலைகளாக (Other District Roads) தரம் உயர்த்தப்பட்டு நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பின் கீழ் கொண்டுவரப்படும்.**

77. பல புதுமையான திட்டங்கள் மூலமாக தமிழ்நாட்டை சூரிய ஒளி மின்சக்தியில் முன்னோடி மாநிலமாக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முக்கியத் தொலைநோக்குப் பார்வை நனவாகி வருகிறது. சூரிய ஒளி மின்சக்தியில் இயங்கும் தெரு விளக்குகள் அமைக்கும் திட்டம் இந்தக் குறிக்கோளுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுள் ஒன்றாகும். இத்திட்டத்தில் கிராமங்களில் தற்போதுள்ள தெரு விளக்குகளுக்குப் பதிலாக, சூரிய ஒளி மின்சக்தியில் இயங்கும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை, 138.71 கோடி ரூபாய் செலவில் 60,000 தெரு விளக்குகள் சூரிய ஒளி மின்சக்தியில் செயல்படும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்திட, 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 46.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**78.** பொதுச் சொத்துக்களை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், 2014–2015 ஆம் ஆண்டில் 6,000 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் உருவாக்கப்படும் சொத்துகளை நிலைப்படுத்தி பராமரித்திட, கிராமப்புறக் கட்டமைப்புத் திட்டத்திற்கு மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் தன்னிறைவுத் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2014–2015 ஆம் ஆண்டில், 470 கோடி ரூபாய் செலவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமும், 100 கோடி ரூபாய் செலவில் கிராமப்புற கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டமும், 100 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த பள்ளிக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டமும் இந்த அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**79.** இந்த அரசின் முன்னுரிமைகளில் கிராமப்புறச் சுகாதாரமும் ஒன்றாகும். 'தூய்மை பாரதம்' இயக்கத்தில், 2014–2015 ஆம் ஆண்டில் 362.41 கோடி ரூபாய் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், தனி நபர்க் கழிப்பறைகளும், சமுதாயக் கழிப்பறைகளும் கட்டும் பணிகள் ஊக்குவிக்கப்படுகின்றன. கிராமங்களைத் தூய்மையாகவும், பிளாஸ்டிக் கழிவுகள் இன்றியும் பராமரிக்க, 'தூய்மை கிராமம்' திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. **கிராமங்களில் திடக் கழிவு மேலாண்மைக்காக, 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

**நகராட்சி நிருவாகம்**

**80.** கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாட்டின் மக்கட் தொகையில் நகர்ப்புர மக்கள் தொகையின் பங்கு 44.04 சதவீதத்திலிருந்து 48.45 சதவீதமாக உயர்ந்துள்ளது. மாநிலத்தில் உள்ள பெரும்பான்மையான தொழில் பகுதிகள், நகரங்களைச் சுற்றி அமைந்திருப்பதால், நல்ல வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்காக இடம் பெயர்ந்துள்ள இளைஞர்களும் படித்தவர்களும் நகர்ப்புர மக்கள் தொகையில் பெரும் அளவில் உள்ளனர். இந்த தனித்துவம் வாய்ந்த மக்கள் தொகைத் தன்மையின் அடிப்படையிலேயே நகர்ப்புரங்களின் தேவைகளும் அமைந்துள்ளன. போக்குவரத்து, குடிநீர் வழங்கல், கழிவுநீர், திடக் கழிவு மேலாண்மை, வீட்டு வசதி ஆகிய முக்கியத் துறைகளில் குறிப்பிடத் தக்க அளவில் அரசின் உதவி தேவைப்படுகிறது. இதனை எய்திடும் வகையில் மாநில நிதிக்குழு மானியத்தின் கீழ் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதியை இந்த அரசு கணிசமாக உயர்த்தியுள்ளது. **2014–2015 ஆம் ஆண்டில், மாநில நிதிக்குழு மானியத்தின் கீழ் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதிக்காக 3,734 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

81. நகர்ப்புர பகுதிகளின் கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்காக செயல்படுத்தப்பட்டு வரும் இரு சிறப்பு நோக்குத் திட்டங்கள் இந்த அரசின் குறிப்பிடத்தக்க முன்முயற்சிகளாகும். சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டமும், ஒருங்கிணைந்த நகர்புர வளர்ச்சித் திட்டமும் பெரும் வெற்றி பெற்றுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில், இந்த இரு சிறப்பு நோக்குத் திட்டங்களுக்காக ஆண்டுதோறும் 1,250 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மாநில அரசு அளிக்கும் இந்த நிதியை பயன்படுத்தி, நிதி ஆதாரத்தை

மேலும் திரட்டி முக்கிய கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்ய உள்ளாட்சி அமைப்புகளுக்கு இத்திட்டங்கள் உதவியுள்ளன. **2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்திலும், சென்னை பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 500 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு 750 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

82. அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிப் பகுதிகளிலும் தகுந்த பாதாளச் சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்த இந்த அரசு சிறப்பு முன்னுரிமை அளித்து வருகிறது. திருச்சி மாநகராட்சியிலும், 21 நகராட்சிகளிலும், 29 பேரூராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை, 2433.79 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கான பணிகள் 2014–2015 ஆம் ஆண்டில் தொடங்கும்.

83. உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு மூன்றாவது நகர்ப்புர வளர்ச்சி திட்டத்தினை இந்த அரசு வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. இதுபோன்ற வளர்ச்சி நிதி ஆதார அணுகுமுறையைப் பின்பற்றி, அதே நிதி நிறுவனத்தின் உதவியோடு தற்போது **தமிழ்நாடு நிலைக்கத்தக்க நகர்ப்புரக் கட்டமைப்புத் திட்டம் என்ற புதிய திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 3,600 கோடி ரூபாயாக இருக்கும். இதில் 2,400 கோடி ரூபாய் கடன் உதவியும் அடங்கும்.**

84. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இரண்டாம் கட்ட ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு இயக்கம் மத்திய அரசால் இதுவரை தொடங்கப்படவில்லை. இந்த இயக்கத்தின் முதல் கட்டம் நமது மாநிலத்தில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்திற்காக 2,648.30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **2014–2015 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தின்**

**மூலமாகச் செயல்படுத்தப்படும் கட்டமைப்புப் பணிகளுக்காக 818.74 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

85. நிதித் திறன் வலுவாக இல்லாத நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள 2013–2014 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் அளவிலான சிறப்பு திடக்கழிவு மேலாண்மை நிதியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த நிதியத்தின் மூலமாக, பேரூராட்சிகளில் 48.58 கோடி ரூபாய் செலவில் 77 பணிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டது. மேலும், இந்த நிதியத்திலிருந்து அளிக்கப்பட்ட 11 கோடி ரூபாய் மானியத்தோடு, திருநெல்வேலி மாநகராட்சியில் 54.49 கோடி ரூபாய் செலவில் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் பொதுத்துறை–தனியார் துறை பங்கேற்பின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2014–2015 ஆம் ஆண்டில் இந்த நிதியத்துக்காக 133 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

86. 2015 ஆம் ஆண்டுக்குள் மாநிலத்தை திறந்தவெளியில் மலம் கழிப்பு இல்லாத மாநிலம் ஆக்கிடும் குறிக்கோளை எய்திடும் வகையில், சிறப்புத் திட்டம் ஒன்றை நகர்ப்புரப் பகுதிகளில் 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. 2014–2015 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக 72.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

87. பேரூராட்சிகளின் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக நபார்டு நிதியுதவித் திட்டத்தில், 2013–2014 ஆம் ஆண்டில் 140 கோடி ரூபாய் செலவில், 425.92 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைப்பணிகள், 75 வெள்ள நீர் வடிகால்கள் மற்றும் 42 பாலப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. **2014–2015 ஆம் ஆண்டில் நபார்டு நிதியுதவித் திட்டத்தின் கீழ், 150 கோடி ரூபாய் செலவில், 388 கிலோமீட்டர் நீளமுள்ள**

**273 சாலைப்பணிகள், 124.96 கிலோமீட்டர் நீளமுள்ள 105 வெள்ள நீர் வடிகால்கள், 29 பாலப்பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**குடிநீர் வழங்கல்**

88. கிராமப் பகுதிகள், பேரூராட்சிகள், நகராட்சிகளில் வாழும் மக்களுக்கு நாள்தோறும் முறையே 55, 70, 135 லிட்டர் நீரை வழங்கிடும் நிலையை உறுதி செய்வதே இந்த அரசின் குறிக்கோளாகும். 2013–2014 ஆம் ஆண்டில் 1,190.72 கோடி ரூபாய் செலவில் 6,000 கிராமப்புறக் குடியிருப்புகளுக்கு பயனளிக்கும் குடிநீர் வழங்கல் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தியுள்ளது. மேலும், 42.25 இலட்சம் மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் மூன்று நகராட்சிகள், 28 பேரூராட்சிகளுடன் 7,011 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்க, 43 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர, 17 நகராட்சிகளில் வாழும் 11.33 இலட்சம் மக்களுக்கும், 30 பேரூராட்சிகளில் வாழும் 4.87 இலட்சம் மக்களுக்கும் பயனளிக்கக் கூடிய 47 தனித் திட்டங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

**89. தேசிய ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டம், அடிப்படைத் தேவைகள் திட்டம், மாநில அரசின் நிதி ஆகியவற்றைப் பயன்படுத்தி, 2014–2015 ஆம் ஆண்டில் மொத்தம் 1,500 கோடி ரூபாய் செலவில் 6,000 ஊரகக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் அடிப்படைத் தேவைகள் திட்டத்திற்காக 186.35 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்றே, தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்தில் மாநில அரசின் பங்கிற்காக 700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

90. ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் ஃப்ளுரோசிஸ் குறைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியதால்,

இப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டப் பகுதிகளில் வாழும் மக்கள் பெரும் பயன் அடைந்துள்ளனர். வேலூர் மாநகராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குமான கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகளும் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆரணி, திண்டிவனம், திருவத்திபுரம், பெரியகுளம் ஆகிய நான்கு நகராட்சிகளில் வாழும் 2.17 இலட்சம் மக்களுக்குப் பயனளிக்கும் தனிக் குடிநீர் வழங்கும் திட்டங்களை 117.69 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. **மதுரை, விருதுநகர், சிவகங்கை, நாகப்பட்டினம், வேலூர், சேலம், திருப்பூர், கோயம்புத்தூர், கடலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியக் கூட்டுக்குடிநீர்த் திட்டங்களுக்காக, 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 745.67 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**நகர்ப்புர வீட்டுவசதி**

91. நகர்ப்புரங்களில் குடிசைப் பகுதிகள் இல்லாத நிலையை உருவாக்கும் நோக்கில் செயல்படுத்தப்படும் ராஜீவ் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், 205.15 கோடி ரூபாய் செலவில் 2,980 குடியிருப்புகளை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அமைத்து வருகிறது. நகர்ப்புர ஏழை மக்களுக்கு அடிப்படைச் சேவைகளை வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக 1,461.02 கோடி ரூபாய் செலவில் 21,208 குடியிருப்புகளை கட்டுவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்த பணிகள் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

92. **2014–2015 ஆம் ஆண்டில், சென்னை, வேலூர், விழுப்புரம், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், ஓசூர், மதுரை, திருச்சி, தஞ்சாவூர், திருநெல்வேலி போன்ற இடங்களில் 197.10 கோடி ரூபாய் செலவில் 1,747 குடியிருப்புகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அமைக்கும்.**

**மக்கள் நலவாழ்வு**

**93.** கடந்த மூன்று ஆண்டுகளில் மருத்துவத் துறையில் நமது மாநிலம் பெரும் முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை மருத்துவமனைகளை வலுப்படுத்தியும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை தரம் உயர்த்தியும் பொதுமக்களுக்கு 24 மணிநேர மருத்துவச் சேவை கிடைப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் முக்கிய மருத்துவக் குறியீடுகளில் ஏற்பட்டுள்ள துரித முன்னேற்றத்திற்கு இத்தகைய முயற்சிகளே காரணம். **2010–2011 ஆம் ஆண்டில் 4,395.30 கோடி ரூபாயாக இருந்த மருத்துவத்துறைக்கான ஒதுக்கீட்டை 2014–2015 ஆம் ஆண்டு 7,005.02 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கியுள்ளதால்தான் இத்தகைய சாதனை சாத்தியமாகியுள்ளது.**

**94.** மாநிலத்தில் உள்ள ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை மருத்துவமனைகளை வலுப்படுத்துவதற்கு தேசிய ஊரக சுகாதார இயக்கம் பேருதவி புரிந்துள்ளது. **100.44 கோடி ரூபாய் செலவில், 118 புதிய ஆரம்ப சுகாதார மையங்களை அமைக்கவும், 76.13 கோடி ரூபாய் செலவில் 64 ஆரம்ப சுகாதார மையங்களை முப்பது படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தவும், இந்த அரசு முடிவு செய்துள்ளது.** தேசிய ஊரக சுகாதார இயக்கத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ள நகர்ப்புரக் கூறுகள் (urban components) மூலம் நகர்ப்புர ஏழை மக்களின் மருத்துவத் தேவைகளை, குறிப்பாக குடிசைப் பகுதிகளிலும், பாதிப்புக்குள்ளாகக் கூடிய மற்ற பகுதிகளிலும் நிறைவு செய்ய இயலும். **இந்த புதிய இயக்கத்தின் மூலம், 105.32 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் சென்னை மாநகராட்சியில் 20 புதிய நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள் அமைக்கப்படுவதுடன், தற்போதுள்ள 100 நகர்ப்புர சுகாதார மையங்களும் வலுப்படுத்தப்படும். மற்ற ஒன்பது**

**மாநகராட்சிகளிலும் 77 நகராட்சிகளிலும், 37 புதிய நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள் அமைக்கப்படுவதோடு, தற்போதுள்ள 243 நகர்ப்புர சுகாதார மையங்களும் வலுப்படுத்தப்படும்.**

**95.** தேசிய ஊரக சுகாதார இயக்கத்தின் ஒரு பகுதியாக, குழந்தைகளைப் பரிசோதனை செய்து ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை அளிக்கும் ஒரு புதிய முன் முயற்சியை இந்த அரசு செயல்படுத்திட முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தில், **ஒவ்வொரு வட்டாரத்திற்கும், ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு மருந்தாளுநர் ஆகியோரைக் கொண்ட இரண்டு குழுக்கள், அதாவது 770 நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்படும். கடுமையான நோய் இருப்பதாக கண்டறியப்படும் குழந்தைகளை மருத்துவமனை சிகிச்சைக்கு பரிந்துரைக்கும் சேவைகளை அளித்திட, 31 மாவட்டங்களிலும் மாவட்டந்தோறும் ஒரு ஆரம்ப நிலை சிகிச்சை மையம் வீதம், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இல்லாத இடங்களில் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் நிறுவப்படும். 2014–2015 ஆம் ஆண்டில், தேசிய ஊரகச் சுகாதார இயக்கத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் 1,400 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும்.**

**96.** உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின் மூலமாக, மகப்பேறு மற்றும் குழந்தை நல சிகிச்சைகள் உள்ளிட்ட முக்கியமான அவசர சிகிச்சை சேவைகளை அளிக்கும் வட்ட மருத்துவமனைகளும், மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் நிறுவப்பட்ட ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல சிகிச்சை மையங்கள் (CeMONC), பச்சிளங் குழந்தைகள் இறப்பு விகிதத்தையும், பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதத்தையும் குறைக்க வழிசெய்துள்ளன.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் வருடாந்திர மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, 15 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் அளவிற்கு தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. இதற்காக, இந்த மருத்துவமனைகளுக்கு 351 மருத்துவர் பணியிடங்களும், 918 பிற பணியிடங்களும் கூடுதலாக வழங்கப்படும். இது தவிர, 78 கோடி ரூபாய் மதிப்பிலான கட்டடங்களும், கருவிகளும் வழங்கப்படும்.

97. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் பிற மாநிலங்கள் பின்பற்றத் தக்க முன்மாதிரித் திட்டமாக விளங்கி வருகிறது. இத்திட்டத்திற்காக 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 757.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

98. **டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம்**, ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த கர்ப்பிணிப் பெண்களுக்கு ஒரு பேருதவியாக அமைந்துள்ளது. நமது நாட்டிலேயே அதிக அளவாக, மூன்று தவணைகளில் மொத்தம் 12,000 ரூபாய் உதவித் தொகை இத்திட்டத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, 19 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் 1,708 கோடி ரூபாய் அளவிற்கு பயனடைந்துள்ளனர். **2014–2015 ஆம் ஆண்டிற்கு, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 716.77 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

99. உயர்நிலை மருத்துவ வசதிகளை விரிவுபடுத்தும் நோக்கத்தோடு, சென்னையில் உள்ள ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் சிறப்பு பன்நோக்கு மருத்துவமனை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. திருச்சியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையை

சிறப்பு பன்நோக்கு மருத்துவமனையாக 100 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்துவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. இது தவிர, **மொத்தம் 300 கோடி ரூபாய் செலவில் நவீன விபத்து சிகிச்சை மையங்களுடன் கூடிய இரண்டு சிறப்பு பன்நோக்கு மருத்துவமனைகளை தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலியில் இந்த அரசு அமைக்கும். அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிறப்புப் பிரிவுகளுக்கான ஒரு புதிய பலமாடிக் கட்டடம் 75 கோடி ரூபாய் செலவில் கட்டடப்படும். 14 கோடி ரூபாய் செலவில் நவீன கருவிகள் வழங்கப்பட்டு சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனை மேம்படுத்தப்படும். மேலும், இம்மருத்துவமனையில் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனத்தின் உதவியுடன் 91 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக புறநோயாளிகளுக்கான வசதிகள் அமைக்கப்படும்.**

**பள்ளிக் கல்வி**

**100.** ஆரம்ப, நடுநிலை, உயர்நிலைக் கல்வி நிலைகளில் மாணவ மாணவியர்களின் பள்ளிச் சேர்க்கை விகிதத்தையும், தொடர்ந்து பயிலுபவர்களின் எண்ணிக்கையையும் உயர்த்திட, பல புதுமையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. இந்த அரசின் தொடர் முயற்சிகளினால், ஆரம்ப, நடுநிலை, உயர்நிலைக் கல்வி நிலைகளில், 2010–2011 ஆம் ஆண்டில் இருந்த இடைநிற்றல் விகிதம் முறையே 0.99, 1.79 மற்றும் 13.27 சதவீதம் என்பது, 2012–2013 ஆம் ஆண்டில், 0.92, 1.70 மற்றும் 8.33 சதவீதமாக குறைந்துள்ளது. கல்வித் தரத்தை, குறிப்பாக மொழித் திறனையும், கணிதத் திறனையும் மேம்படுத்திடவும் இந்த அரசு முழுமையான கவனம் செலுத்தி வருகிறது. **மாநிலத்தில் உள்ள பள்ளிக் குழந்தைகள் அனைவருக்கும் தரமான இலவசக் கல்வி அளித்திட, 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்வித் துறைக்கு 17,731.71 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

101. புதிய பள்ளிக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், மாணவியருக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் தனி கழிப்பறைகள், சமையல் கூடங்கள், சுற்றுச் சுவர்கள், ஆய்வகங்கள் போன்ற கட்டமைப்புகளைப் பள்ளிகளில் ஏற்படுத்திட அனைவருக்கும் கல்வித் திட்டம், தேசிய இடைநிலைக் கல்வித் திட்டம், நபார்டு வங்கியின் நிதியுதவி போன்ற பல்வேறு திட்டங்களில் ஒதுக்கப்பட்ட நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி கணிசமான முதலீடுகளை இந்த அரசு செய்துள்ளது. **2014–2015 ஆம் ஆண்டில் பள்ளிகளின் கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்ய நபார்டு நிதியுதவியின் மூலம் 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கு, மாநில அரசின் பங்காக, 2014–2015 ஆம் ஆண்டில் 700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசிய இடைநிலைக் கல்வித் திட்டத்திற்கு, மாநில அரசின் பங்காக, 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 384.90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

102. பள்ளிக் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் மாநில அரசின் நிதி மூலமாக நிறைவு செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்துள்ளது. இதற்காக, 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் பின்வரும் திட்டங்களுக்காக இந்த அரசு மொத்தமாக 1,631.53 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

i. **111.29** இலட்சம் மாணவ மாணவியருக்கு பாடப் புத்தகங்கள் வழங்குவதற்காக **264.35** கோடி ரூபாய்.

ii. **77.66** இலட்சம் மாணவ மாணவியருக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்குவதற்காக **106.45** கோடி ரூபாய்.

iii. **20.57** இலட்சம் மாணவ மாணவியருக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை வழங்குவதற்காக **323** கோடி ரூபாய்.

iv. **46.29** இலட்சம் மாணவ மாணவியருக்கு நான்கு சீருடைத் தொகுப்புகள் வழங்குவதற்காக **409.30** கோடி ரூபாய்.

v. **90.78** இலட்சம் மாணவ மாணவியருக்கு பள்ளிப் புத்தகப் பைகள் வழங்குவதற்காக **120.71** கோடி ரூபாய்.

vi. **77.66** இலட்சம் மாணவ மாணவியருக்கு காலணிகள் வழங்குவதற்காக **120.07** கோடி ரூபாய்.

vii. **9.39** இலட்சம் மாணவ மாணவியருக்கு வடிவியல் பெட்டிகள், வரைபடப் புத்தகங்கள் போன்றவை வழங்குவதற்காக **6.77** கோடி ரூபாய்.

viii. **31.45** இலட்சம் மாணவ மாணவியருக்கு கலர் பென்சில்கள், கிரேயான்கள் வழங்குவதற்காக **6.49** கோடி ரூபாய்.

ix. **6.30** இலட்சம் மாணவ மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்குவதற்காக **216.04** கோடி ரூபாய்.

x. மலைப் பகுதிகளில் படிக்கும் **1.03** இலட்சம் மாணவ மாணவியருக்கு கம்பளி ஆடைகள் வழங்க **3.71** கோடி ரூபாய்.

xi. **36.07** இலட்சம் மாணவியர்களுக்கு சானிடரி நாப்கின்கள் வழங்க **54.63** கோடி ரூபாய்.

**103.** இந்த அரசின் முதல் மூன்று ஆண்டுகளில், பள்ளி, கல்லூரிகளில் பயிலும் **22.33** இலட்சம் மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், தேசிய அளவில் பல பாராட்டுக்களைப் பெற்றுள்ளதோடு,

மற்ற பல மாநிலங்கள் பின்பற்றத்தக்க முன்னோடியாக நமது மாநிலத்தை முன்னிறுத்தி உள்ளது. **வரும் நிதியாண்டிலும் 1,100 கோடி ரூபாய் செலவில் +2 மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு 5.5 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கப்படும்.**

**104.** மாணவ மாணவியர்கள் தொடர்ந்து உயர்நிலைக் கல்வி பயில ஊக்குவிக்கும் வகையில், இடைநிற்றலைக் குறைப்பதற்காக அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை அளிப்பது, இந்த அரசின் மற்றுமொரு திட்டமாகும். 2013–2014 ஆம் ஆண்டில், 381 கோடி ரூபாய் செலவில் 23.21 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர். 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்திலும், இத்திட்டத்திற்காக 381 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாணவ மாணவியர் தொடர்ந்து மேல்நிலை பள்ளிக் கல்வி பயிலுவது ஊக்குவிக்கப்படுவதால், 2011–2012 ஆம் ஆண்டில் முறையே 8.38 இலட்சமாகவும் 7.16 இலட்சமாகவும் இருந்த, 10, 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை, 2013–2014 ஆம் ஆண்டில் முறையே 11.4 இலட்சமாகவும், 8.4 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது.

**உயர் கல்வி**

**105.** திறன்மிக்க மனித ஆற்றலுடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்கள் பல்வேறு துறைகளில் அமையப்பெற்று அதன் மூலமாக, இந்தியாவின் புதுமைப் படைப்பு மையமாகவும், அறிவாற்றலின் தலைநகரமாகவும் தமிழ்நாடு திகழவேண்டும் என்ற மகத்தான இலட்சியம் 'தொலைநோக்குப் பார்வை 2023'–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இலக்கை எட்டிட, உயர்கல்வி நிறுவனங்களின் மேம்பாட்டிற்கு திட்டமிட்ட முதலீடுகளை இந்த அரசு தொடர்ந்து செய்து வருகிறது. உயர்கல்விச்

சேர்க்கை விகிதம் **25** சதவீதத்தை எட்ட வேண்டும் என்று பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இலக்கிடப்பட்டாலும், **2011–2012** ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, ஏற்கெனவே **38.2** சதவீத அளவை நமது மாநிலம் எட்டியுள்ளது. இந்த அரசின் கடந்த மூன்று ஆண்டுகளில் **12** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், **24** பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், நான்கு அரசுப் பொறியியல் கல்லூரிகள், **11** பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் புதியதாக தொடங்கப்பட்டுள்ளன. இதுபோன்றே, மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசுக் கல்வி நிறுவனங்களில் **798** புதிய பாடப் பிரிவுகளை தொடங்கிட இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மாநிலத்தில் உயர்கல்விச் சேர்க்கை விகிதத்தை உயர்த்திட, கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில், அரசுக் கல்வி நிறுவனங்களை அமைக்க வேண்டும் என்பதே இந்த அரசின் குறிக்கோளாகும். **2014–2015** ஆம் ஆண்டில் பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கான மானியமாக **979.32** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **2014–2015 ஆம் ஆண்டில், உயர்கல்வித் துறைக்கு 3,627.93 கோடி ரூபாய் வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**106.** முதல் தலைமுறைப் பட்டப்படிப்பு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு கல்விக் கட்டணத்தை திருப்பி அளிக்கும் திட்டத்தில், **2013–2014** ஆம் ஆண்டிற்கு **650** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு **2,73,675** மாணவ மாணவியர்கள் பலனடைந்தனர். **2014–2015 ஆம் ஆண்டில் இதற்காக 585.17 கோடி ரூபாய் வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** இந்த முன்னோடி முயற்சியால் இலட்சக்கணக்கான மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். குறிப்பாக கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். இந்த அரசின் இத்தகைய ஒருங்கிணைந்த முயற்சிகளால், **2010–2011** ஆம் ஆண்டில் **6,51,807** ஆக இருந்த

மாநிலத்தின் உயர் கல்விச் சேர்க்கை, 2013–2014 ஆம் ஆண்டில் 7,31,485 ஆக உயர்ந்துள்ளது.

**விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்**

**107.** விளையாட்டு வளர்ச்சியை இந்த அரசு பெருமளவு ஊக்குவித்து வருகிறது. கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல், பயிற்சி அளித்தல் ஆகிய பல்வேறு வழிகளிலும் நமது மாநிலத்தின் இளைஞர்களை தேசிய மற்றும் சர்வதேச அரங்குகளில் முன்னிறுத்திட இந்த அரசு முனைந்துள்ளது. மாநிலமெங்கும், உள் விளையாட்டு அரங்கங்கள், விளையாட்டு வீரர் தங்கும் விடுதிகள், நீச்சல் குளங்கள், விளையாட்டு உபகரணங்கள், செயற்கைத் தளங்கள் போன்ற புதிய விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. விளையாட்டு மற்றும் விளையாட்டு சார்ந்த பணிகளுக்காக கடந்த மூன்று ஆண்டுகளில் 380.77 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டிலும், இதற்காக வரவு–செலவுத் திட்டத்தில் 146.64 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுலா**

**108.** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் நமது நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 33.08 இலட்சத்திலிருந்து 39.90 இலட்சமாக உயர்ந்துள்ளது. 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து சுற்றுலாக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு இந்த அரசு 135.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. 2013–2014 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடுகளில் சுற்றுலாத் துறைக்காக 136.10 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு, 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில்

178.51 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறைக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் விதத்தில், '2014 தமிழ்நாடு செல்வோம்' என்ற புதுமையான விளம்பரப் பிரச்சாரத்தையும் இந்த அரசு தொடங்கியுள்ளது.

109. ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் 'சுற்றுலாக் கட்டமைப்பு முதலீட்டுத் திட்டம்' துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில், கிழக்குச் சுற்றுலாச் சுற்றமைப்பிலும், தென்னகச் சுற்றுலாச் சுற்றமைப்பிலும் தரம் மிக்க கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 2014–2015 ஆம் ஆண்டுக்கு 55.53 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமூக நலன்**

110. கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படும் இந்த அரசு, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்கு எப்பொழுதும் உயர் முன்னுரிமை அளித்து வந்துள்ளது. பட்டதாரிப் பெண்களுக்குக் கூடுதல் நிதி உதவி அளிக்கக் கூடிய பல்வேறு திருமண உதவித் திட்டங்கள், இளம் பெண்களை உயர்கல்வியில் சேர ஊக்குவித்து, பெண்களின் சராசரி திருமண வயது உயர வழிவகை செய்துள்ளது. இதனால் பெண்களின் ஒட்டுமொத்த உடல் நலனும் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்துள்ளது. 2013–2014 ஆம் ஆண்டில் மட்டும் இத்திட்டத்தில் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் ஏழைக் குடும்பங்கள் பலன் அடைந்துள்ளனர். **2014–2015 ஆம் ஆண்டில் பல்வேறு திருமண உதவித் திட்டங்களுக்காக 751.09 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 204 கோடி ரூபாய் திருமாங்கல்யத்திற்கான தங்க நாணயங்கள் வாங்குவதற்காகவும், 547.09 கோடி ரூபாய் பண உதவிக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**111.** பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தில், 2013–2014 ஆம் ஆண்டில் 105 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு 59,229 பெண் குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். 2014–2015 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 105 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்றே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மீண்டும் செயலாக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள தொட்டில் குழந்தைத் திட்டத்தின் மூலமாக, 2013–2014 ஆம் ஆண்டில் கைவிடப்பட்ட 4,390 குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

**112.** பல்வேறு சமூக பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உழவர் பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் மூலம் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 2010–2011 ஆம் ஆண்டிலிருந்த 23.71 இலட்சம் என்பது 31.12.2013 அன்றைய நிலவரப்படி 36.41 இலட்சமாக உயர்ந்துள்ளது. **இந்த திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடும் 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 4,200 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.**

**113.** கடந்த மூன்று ஆண்டுகளில், 95 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர்களை இந்த அரசு வழங்கி வருகிறது. **வரும் நிதியாண்டில் மேலும் 35 இலட்சம் குடும்பங்களுக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர்கள் வழங்கப்படும். 2014–2015 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக 2,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**114.** நமது நாட்டில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் சேவைகளை அளிப்பதில் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். 15,313 அங்கன்வாடி

மையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், **15,399** மையங்களைப் பழுதுபார்த்தல், குழந்தைகள் எளிதாகப் பயன்படுத்தக் கூடிய வகையில் **16,402** கழிப்பறைகளை அமைத்தல், **20,558** மையங்களுக்கு மின் இணைப்பு பெறுதல், அனைத்து மையங்களுக்கும் எடை பார்க்கும் கருவிகள், சுகாதாரப் பைகள் வழங்குதல் ஆகிய பணிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தில், ஆறு முதல் **36** மாதங்களுக்கு உட்பட்ட **16.6** இலட்சம் குழந்தைகளுக்கு கூடுதல் ஊட்டச்சத்து உணவு வழங்கப்படுகிறது. இரண்டு முதல் ஐந்து வயதுக்கு உட்பட்ட **11.55** இலட்சம் குழந்தைகளுக்கு சமைக்கப்பட்ட சத்தான உணவு வழங்கப்படுகிறது. **6.64** இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் **3.86** இலட்சம் வளரிளம் பெண்களுக்கும் கூடுதல் ஊட்டச்சத்து உணவு வழங்கப்படுகிறது. **இந்த அனைத்து முயற்சிகளுக்காகவும், 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 1,475.42 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.**

115. ஐந்து முதல் 15 வயதுக்கு உட்பட்ட 53.52 இலட்சம் குழந்தைகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் பயனளித்து வருகிறது. இது நமது மாநிலத்தின் பெருமை மிக்க திட்டங்களுள் ஒன்றாகும். 42,490 மதிய உணவு மையங்களில், 6,257 மையங்களுக்கு மட்டுமே சமையல் எரிவாயு இணைப்பு இதுவரை வழங்கப்பட்டுள்ளது. **எனவே, எஞ்சியுள்ள 36,233 மையங்களுக்கும் சமையல் எரிவாயு இணைப்பு அல்லது வாய்ப்புள்ள இடங்களில் மரத் துகள் எரியூட்டி போன்றவற்றை பயன்படுத்தும் நீராவி சமையல் அடுப்பு, 83 கோடி ரூபாய் செலவில், 2014–2015 ஆம் ஆண்டிலேயே அமைக்கப்படும். 2014–2015 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்காக 1,412.88 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**

**116.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளபடி, நகர்ப்புரப் பகுதிகளில் பணிபுரியும் பெண்களின் நலனையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காக 13 மாவட்டங்களில் 23.85 கோடி ரூபாய் செலவில் பணிபுரியும் பெண்கள் தங்கும் 20 விடுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில் தேவைப்படும் இடங்களில், 17.50 கோடி ரூபாய் செலவில் பணிபுரியும் பெண்கள் தங்கும் 14 விடுதிகள் புதிதாக அமைக்கப்படும்.**

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

**117.** ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலனுக்குத் தேவையான போதிய நிதி ஒதுக்கீட்டை இந்த அரசு தொடர்ந்து உறுதி செய்து வருகிறது. **மாநிலத்தின் ஆண்டுத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்காக 7,603 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்தத் திட்ட ஒதுக்கீட்டில் 18.02 சதவீதமாகும்.**

**118.** பெண் குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கையை உயர்த்தி இடைநிற்றலைக் குறைப்பதற்காக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மூன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் 500 ரூபாயும், ஆறாம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு 1,000 ரூபாயும் இந்த அரசு அளித்து வருகிறது. 2013–2014 ஆம் கல்வி ஆண்டிலிருந்து, ஏழாம், எட்டாம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவியர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, ஆண்டுதோறும் 1,500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக, 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 55.11 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**119.** ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. உயர் கல்விக்கான கல்வி உதவித் தொகைத் திட்டத்தை தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ மாணவியருக்கும் இந்த அரசு விரிவு படுத்தியுள்ளது. **இந்த முயற்சிகளைத் தொடர்வதற்காக, 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்வி உதவித் தொகைக்காக 55.92 கோடி ரூபாயும், உயர்கல்வி உதவித் தொகைக்காக 676 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.**

**120.** தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலமாக ஆதிதிராவிடர் நலனுக்கான பல்வேறு வருவாய் ஈட்டும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த நிறுவனத்திற்குப் பங்கு மூலதன உதவியாக 33.15 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்திற்குப் பங்கு மூலதன உதவியாக 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய சிறப்பு உதவித் திட்டத்தில், 2013–2014 ஆம் ஆண்டிற்கு 80 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தில் 130 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**121.** பழங்குடியினர் நலன் காக்க 17 துறைகளின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டுவரும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக 435.55 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்தத் திட்ட ஒதுக்கீட்டில் 1.03 சதவீதமாகும்.

**122.** பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை அளிக்கவும், வருவாய் ஈட்டும் தொழில்களை மேற்கொள்ளவும், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்

திட்டத்திற்கு **2013–2014** ஆம் ஆண்டில், இந்த அரசு **50** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. **2014–2015** ஆம் ஆண்டிற்கும் இத்திட்டத்திற்காக மேலும் **50** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், அரசுப் பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகள் உட்பட தங்கும் விடுதிகளை மேம்படுத்துவதற்காக 10 கோடி ரூபாய் செலவிடப்படும்.

123. 1,300 ஆதிதிராவிடர் விடுதிகள் மற்றும் 42 பழங்குடியினர் விடுதிகள் மூலம் 1,00,021 மாணவ மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர். இங்கு தங்கியுள்ள மாணவர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணச் சலுகை, பள்ளி மாணவர்களுக்கு 755 ரூபாயாகவும், கல்லூரி மாணவர்களுக்கு 875 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 54 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில், 27 கோடி ரூபாய் செலவில் 27 விடுதிகளுக்கான கட்டடங்களை அமைப்பதற்கு ஏற்கெனவே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. **எஞ்சியுள்ள 27 விடுதிகளுக்கான கட்டடங்கள் 2014–2015 ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.** 2014–2015 ஆம் ஆண்டிற்கு விடுதிப் பராமரிப்பு மற்றும் உணவு வழங்கும் செலவிற்காக 107.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலன்**

124. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 50 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கிச் செயல்படுத்தும் இந்த அரசின் கொள்கை மூலம் 2013–2014 ஆம் ஆண்டில் 4,84,933 மாணவ மாணவியர்கள் பல்வேறு உயர்கல்விப் பிரிவுகளில் சேரும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இப்பிரிவுகளைச் சேர்ந்த ஏழை மாணவ மாணவியர்கள் கல்வியைத் தொடர்வதற்காக, 2013–2014 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் பல்வேறு கல்வி உதவித் தொகைத்

திட்டங்களுக்காக 202.08 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 6.40 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டங்களில் தொலைநோக்குப் பார்வையுடன் மாணவ மாணவியர்கள் பயன்பெறுவதற்கான பெற்றோர் ஆண்டு வருமான உச்சவரம்பை, ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாக 2013–2014 ஆம் ஆண்டு முதல் உயர்த்திய இந்த அரசின் முடிவால், ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் மாணவ மாணவியர்கள் கூடுதலாகப் பயன்பெற்றுள்ளனர். **2014–2015 ஆம் ஆண்டிற்கு இத்தகைய கல்வி உதவித் தொகைத் திட்டங்களுக்காக 236.32 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

125. 1,294 விடுதிகளில் தங்கிப் பயிலும் 80,064 மாணவ மாணவியர்களுக்கு இலவசமாக உணவும் உறைவிடமும் வழங்கப்படுகிறது. 2013–2014 ஆம் ஆண்டு முதல், இந்த மாணவ மாணவியர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணச் சலுகை, பள்ளி மாணவர்களுக்கு 755 ரூபாயாகவும், கல்லூரி மாணவர்களுக்கு 875 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டிற்கு விடுதிப் பராமரிப்பு மற்றும் உணவு வழங்கும் செலவிற்காக 85.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

126. அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டும் நோக்கோடு, தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 68 விடுதிகளுக்கும் 85.94 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு 2013–2014 ஆம் ஆண்டில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. **2014–2015 ஆம் ஆண்டில் 2.80 கோடி ரூபாய் செலவில் 10 கல்லூரி விடுதிகள் புதியதாகத் தொடங்கப்படும். தற்போது செயல்பட்டுவரும் 10 கல்லூரி விடுதிகளுக்கு 4.5 கோடி ரூபாய் செலவில் கூடுதல் தங்கும் வசதிகள் ஏற்படுத்தப்படும். இதுபோன்றே, தற்போது**

**செயல்பட்டுவரும் 10 கல்லூரி விடுதிகளுக்கு 2014–2015 ஆம் ஆண்டில் 16 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.**

**சிறுபான்மையினர் நலன்**

**127.** சிறுபான்மையின மாணவ மாணவியர்களின் நலனுக்காக, பல்வேறு கல்வி உதவித் தொகைத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. **2014–2015** ஆம் ஆண்டில் பல்வேறு கல்வி உதவித் தொகைத் திட்டங்களுக்காக **72.39** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஜெருசலேம், ஹஜ் புனிதப் பயணங்கள் மேற்கொள்பவர்களுக்கான நிதி உதவியும் இந்த அரசால் தொடர்ந்து வழங்கப்படும். இந்த வரவு–செலவுத் திட்டத்தில் சிறுபான்மையினர் நலனுக்காக **93.84** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலன்**

**128.** அமைப்பு சாராத் துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியங்கள் பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கி வருகின்றன. இதுவரை **8,19,579** தொழிலாளர்கள் இந்த வாரியங்களில் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். கடந்த மூன்று ஆண்டுகளில், **284.45** கோடி ரூபாய் அளவிலான பல்வேறு நலத் திட்ட உதவிகள் **12,07,731** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. நேரடியாக இத்தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளில் நலத்திட்ட உதவிகளை செலுத்தும் மின்னணு பணப்பரிமாற்ற முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**மண்பாண்டத் தொழிலாளர் நலன்**

**129.** தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ், **34** பதிவுபெற்ற மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவு அமைப்புகள்

உள்ளன. மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியத்தில் 10,753 உறுப்பினர்கள் உள்ளனர். **மழைக் காலத்தில் மண்பாண்டங்கள் செய்வது கடினம் என்பதைக் கருத்தில்கொண்டு இக்காலங்களில் அவர்களுக்கு வாழ்வாதார உதவியாக இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு 4,000 ரூபாய் பராமரிப்பு உதவித் தொகை அளித்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது.** இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் 4.50 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

**மாற்றுத் திறனாளிகள் நலன்**

130. மாற்றுத் திறனாளிகள் நலனுக்கு இந்த அரசு உயர் முக்கியத்துவம் அளித்து வருகிறது. 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக 284.29 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பதில் சிறப்பாகச் செயல்படும் மாநிலத்திற்கு வழங்கப்படும் தேசிய விருது 2013 ஆம் ஆண்டில் நமது மாநிலத்திற்கு கிடைத்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.**

131. ஒரு புதுமையான முயற்சியாக, இரண்டு கால்களையும் இழந்த மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி அமைக்கப்பட்ட 1,000 விலையில்லா ஸ்கூட்டர்கள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. கடும் ஊனமுற்றவர்கள், மன வளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் 1,08,530 பேர் பயன்பெற்று வருகின்றனர். **வரும் நிதியாண்டிலிருந்து இவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகை 1,500 ரூபாயாக உயர்த்தப்படும்.** 2013–2014 ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்

தொகை மற்றும் கல்வி உதவியாளருக்கான படிகள் 100 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளன. ஆறு வயதிற்கு உட்பட்ட மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கு உடற்பயிற்சி சிகிச்சை வழங்குவதற்காக 4.49 கோடி ரூபாய் செலவில் 32 நடமாடும் சிகிச்சை மையங்களை அமைத்திட இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்கள் 2014–2015 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**வழக்கறிஞர் நலன்**

132. மாநிலத்தில் உள்ள வழக்கறிஞர் நலனை பாதுகாக்க இந்த அரசு எப்போதும் கவனம் செலுத்தி வருகிறது. காலஞ்சென்ற வழக்கறிஞர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2012 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து 5.25 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். இதுவரை, தமிழ்நாடு வழக்கறிஞர் நலநிதிக்கு மானியமாக 8 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியுள்ளது.

**அரசு அலுவலர் நலன்**

133. அரசின் பல்வேறு நலத்திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் அரசு அலுவலர்கள் முக்கியப் பங்காற்றுகின்றனர். நிதிநிலை கடினமாக இருக்கக்கூடிய சூழ்நிலையிலும், அகவிலைப்படி உயர்வு, சிறப்பு மிகை ஊதியம் போன்றவற்றை குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த அரசு அளித்து வருகிறது. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 69,130 அலுவலர்கள் 287.72 கோடி ரூபாய் அளவிற்கு பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைகள் பெற்று பயனடைந்துள்ளனர்.

**ஓய்வூதியர் நலன்**

134. தற்போது ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை ஏழு இலட்சமாகும். இவர்களுக்கான மருத்துவத் தேவைகளுக்கு உதவிடும் குறிக்கோளோடு, அரசு அலுவலர்களுக்கான மருத்துவத் காப்பீட்டுத் திட்டம் போன்றே, ஓய்வூதியம் பெறுவோர்களுக்கும் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என இந்த அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. இதன்படி, நான்கு ஆண்டு காலத்திற்குள் இரண்டு இலட்சம் ரூபாய் வரை மருத்துவச் சிகிச்சைக்கான காப்பீட்டு வசதி அவர்களுக்கு கிடைக்கும். இதைச் செயல்படுத்துவதற்கு காப்பீட்டு நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கை தற்போது நடைபெற்று வருகிறது. இத்திட்டம் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். **2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஓய்வூதியப் பலன்களுக்காக 16,021 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**வரவு–செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்**

135. வரும் நிதியாண்டில் இங்கு குறிப்பிடப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான நிதி ஆதாரங்கள் குறித்து நான் இப்போது விளக்க விரும்புகிறேன்.

136. 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மாநிலத்தின் சொந்த வருவாய் 86,065.39 கோடி ரூபாயாக இருக்குமென்று இந்த அரசு மதிப்பிட்டிருந்தது. நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரச் சூழல் மேம்படும் என்ற கணிப்பின் அடிப்படையில் இந்த மதிப்பீடுகள் செய்யப்பட்டிருந்தன. உறுதியளித்தவாறே நிதிப்பங்கீட்டையும், மானிய உதவிகளுக்கான நிதியையும் மத்திய அரசு உறுதியாக விடுவிக்கும்

என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்த இரண்டு எதிர்பார்ப்புகளும் நாம் எதிர்பார்த்தபடி முழுமையாக நிறைவேறவில்லை.

137. இந்த நிதியாண்டின் தொடக்கத்திலிருந்தே மாநில வரி வசூலில் தொடர்ந்து குறைவான வளர்ச்சியே காணப்பட்டது. குறிப்பாக வணிகவரி வசூலில் இக்குறைபாடு மிகவும் அதிகமாக ஏற்பட்டு அதன் இலக்கு 2,734.72 கோடி ரூபாய் அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது. மதுபானங்கள் மீதான ஆயத்தீர்வை முறையை மாற்றி அமைத்ததன் விளைவாக, 2013–2014 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 8,601.22 கோடி ரூபாய் அளவிற்கான ஆயத்தீர்வை வருவாய், வணிகவரி மதிப்பீடுகளின் கீழ் சேர்க்கப்பட்டது. இதன்படி 2013–2014 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வணிகவரி வசூல் இலக்கு 64,626.46 கோடி ரூபாயாக இருக்க வேண்டும். ஆனால், 2013–2014 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் இது 61,891.74 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டிற்கும், 2013–2014 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளின் மீது 11.04 சதவீத வளர்ச்சியை மட்டுமே கருதவேண்டிய சூழ்நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் வணிக வரி மூலமாக 68,724.06 கோடி ரூபாய் மட்டும் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

138. இதுபோன்றே ஆயத்தீர்வை முறை மாற்றி அமைக்கப்பட்ட பின்பு, இதன் கீழ் கிடைக்கும் வருவாய்க்கான இலக்குகளும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இதன்படி 14,469.87 கோடி ரூபாயாக இருந்த வருவாய் மதிப்பீடு, 2013–2014 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 5,868.65 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. 10.47 சதவீத வளர்ச்சியைக் கணக்கில் கொண்டு 2014–2015 ஆம் ஆண்டு ஆயத்தீர்வை வருவாய் 6,483.04 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**139.** கடந்த இரண்டு ஆண்டுகளாக கட்டுமானத் தொழிலும் குறைந்த வளர்ச்சியையே கண்டுவரும் நிலையில், நிலப் பரிமாற்றங்களை பதிவு செய்யும் பத்திரப் பதிவுகளும் சற்றே குறைந்துள்ளன. இந்த குறைவான வளர்ச்சியை கருத்தில் கொண்டு **2013–2014** ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில், இந்த வருவாயை **652.24** கோடி ரூபாய் அளவிற்கு குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வரும் ஆண்டில் **13.54** சதவீத வளர்ச்சியை மட்டும் கணக்கில் கொண்டு **2014–2015** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் வருவாய் **10,470.18** கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**140.** வாகனங்கள் மீதான வரிகளும் **12.31** சதவீத அளவிற்கு வளர்ச்சி அடையும் என கணக்கில் கொள்ளப்பட்டு, **2014–2015** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இந்த வரிகள் மூலமாகக் கிடைக்கும் வருவாய் **5,147.14** கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**141.** இதன் அடிப்படையில், **2013–2014** ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் **86,065.40** கோடி ரூபாயிலிருந்து **83,363.21** கோடி ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. **2013–2014** ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளின் மீது **10.16** சதவீத வளர்ச்சி மட்டுமே இருக்குமென கருதப்பட்டு, **2014–2015** ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் சொந்த வரி வருவாய் **91,835.35** கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**142.** இருப்பினும், மாநிலத்தின் வரி அல்லாத வருவாய் வசூல் சற்றே அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. **2013–2014** ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் இந்த இனத்தின் கீழ் கிடைக்கும் வருவாய் **7,857.35** கோடி ரூபாய் என மாற்றியமைக்கப்பட்டுள்ளது. **2014–2015** ஆம் ஆண்டிற்கு வரி அல்லாத வருவாய் **8,083.98** கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

143. 2013–2014 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில், மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு 16,485.97 கோடி ரூபாய் என மதிப்பீடு செய்யப்பட்டது. 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தாக்கல் செய்யப்பட்ட மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் மதிப்பிடப்பட்டிருந்ததை விட இது குறைவாகும். இருப்பினும், மத்திய அரசு அதன் வரி வருவாய் வளர்ச்சியை உறுதி செய்து ஏற்கெனவே மதிப்பிடப்பட்டவாறு, மத்திய வரி வருவாயில் மாநில அரசின் பங்கை வழங்கும் என எதிர்பார்க்கிறோம். 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 15.34 சதவீத வளர்ச்சி இருக்கும் என்ற கணிப்பில் இந்த வருவாய் 19,014.23 கோடி ரூபாயாக கணக்கிடப்பட்டுள்ளது.

144. இத்தருணத்தில், மத்திய விற்பனை வரிக்கான இழப்பீடாக எந்தத் தொகையையும் மத்திய அரசு நமக்கு இந்த ஆண்டு வழங்கவில்லை என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவிக்க விரும்புகிறேன். மத்திய விற்பனை வரிக்கான இழப்பீடாக 9,300 கோடி ரூபாய் மத்திய அரசால் மாநிலங்களுக்கு வழங்கப்படும் என 2013–2014 ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்பட்ட உறுதிமொழி நிறைவேறாத சூழ்நிலைகள்தான் தற்போது நிலவி வருகின்றன. மத்திய அரசிடம் நிலுவையில் இருக்கக்கூடிய தொகையையும் கணக்கில் கொண்டு, அதன் 2013–2014 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் இதற்கான ஒதுக்கீடு உயர்த்தப்பட்டு இந்த நிதியாண்டின் இறுதிக்குள் உரிய நிதி விடுவிக்கப்படும் என நான் நம்புகிறேன்.

145. 2012–2013 ஆம் ஆண்டு மத்திய அரசு திட்டச் செலவினங்களை கடுமையாகக் குறைத்தது. இதனால் பல்வேறு அமைச்சகங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய நிதி கிடைக்கப் பெறவில்லை. இதன் விளைவாக மத்திய அரசிடமிருந்து பெறவேண்டிய நிலுவைத் தொகையில் சில இனங்கள் 2013–2014 ஆம் ஆண்டில்

கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் கணக்கிடப்பட்டதை விட 638.24 கோடி ரூபாய் அதிகமாக 2013–2014 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, இந்த நிலுவைத் தொகையையும் சேர்த்து மத்திய அரசிடமிருந்து 9,101.95 கோடி ரூபாய் மானிய உதவியாக கிடைக்கும். 2014–2015 ஆம் ஆண்டில் இந்த மானிய உதவி 8,456.27 கோடி ரூபாயாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நிதிநிலைக் குறியீடுகள்**

146. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தின்படி, வருவாய்ப் பற்றாக்குறை அறவே நீக்கப்பட்டு, நிதிப்பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மூன்று சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இந்த அரசு மாநிலத்தின் நிதிநிலையை மீட்டெடுத்து சிறந்த நிதி மேலாண்மை மூலமாக முதல் இரண்டு ஆண்டுகளில் அனைத்து நிதி நிலைக் குறியீட்டு இலக்குகளையும் எய்தியுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டிலும் 1,760.27 கோடி ரூபாய் வருவாய் உபரியை உறுதி செய்துள்ளது. மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.39 சதவீதத்திற்குள் இருக்குமாறு நிதிப் பற்றாக்குறையை 16,518.98 கோடி ரூபாய் அளவில் கட்டுப்படுத்தியுள்ளது.

147. நடப்பு நிதியாண்டிலும் 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள இலக்குகளை எட்டுவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் வருவாய் உபரி 244.27 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறையும் 21,642.83 கோடி ரூபாய் அளவில் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.68 சதவீதமாகும். **இந்த மதிப்பீடுகள் அனைத்தையும்**

**கணக்கில் கொண்டு, 2014–2015 ஆம் ஆண்டில் வருவாய் உபரி 289.36 கோடி ரூபாயாக இருக்குமெனவும், நிதிப் பற்றாக்குறை 25,714.31 கோடி ரூபாயாக இருக்குமெனவும் கணிக்கப்பட்டுள்ளது. இந்த நிதிப் பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.73 சதவீதமாக இருக்கும்.**

148. இந்த அரசு வருவாய் உபரி நிலையை உறுதி செய்துள்ளதால், மாநில அரசு வாங்கும் கடன் முழுவதும் மூலதனச் செலவினங்களுக்காக மட்டுமே செலவிடப்படுகிறது. 2013–2014 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் மூலதனச் செலவு 21,887.10 கோடி ரூபாயாக இருக்கும். வரும் நிதியாண்டில் மூலதனச் செலவு 18.80 சதவீத அளவிற்கு உயரும் என கணிக்கப்பட்டுள்ளதால், 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மூலதனச் செலவு 26,003.67 கோடி ரூபாய் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

149. பதின்மூன்றாவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மூன்று சதவீத அளவில் மாநிலத்தின் ஆண்டுக் கடன் வரம்பு வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி, நடப்பு நிதியாண்டில் மாநில அரசு 24,263 கோடி ரூபாய் வரையில் கடன் பெற இயலும் என்ற போதிலும், பெறுகின்ற கடன் அளவைக் குறைக்க வேண்டும் என்ற உறுதியோடு இந்த அரசு 20,218.77 கோடி ரூபாய் அளவில் மட்டுமே நிகரக் கடன்பெற முடிவு செய்துள்ளது. இதுபோன்றே 2014–2015 ஆம் ஆண்டிற்கும், அனுமதிக்கப்பட்ட நிகர கடன் அளவான 28,267 கோடி ரூபாயை விட குறைந்த அளவில், அதாவது, 25,000.22 கோடி ரூபாய் அளவிலேயே நிகரக் கடன் பெறப்படும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! அரசின் வட்டிச் செலவினத்தை குறைக்க வேண்டும் என்பதற்காகவே கடந்த மூன்று ஆண்டுகளாக அனுமதிக்கப்பட்ட அளவைவிடக்

குறைவாகவே இந்த அரசு தொடர்ந்து கடன்பெற்று வருகிறது என்பதை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன் மூலம், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமை சட்டத்தில் வரையறுக்கப்பட்ட இலக்கான 25.2 சதவீதத்தை விட குறைந்த அளவில், அதாவது 2014–2015 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் அளவு 18.91 சதவீத அளவிலேயே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

150. நிதிநிலை அறிக்கையின் இணைப்பில், இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் இணைக்கப்பட்டுள்ளது. இதனை நிதிநிலை அறிக்கையின் ஒரு பகுதியாக படிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

151. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடினமான நிதிச் சூழலிலும், மாநிலப் பொருளாதாரத்தைத் தொய்வடைந்துவிடாமல் காத்து வலுப்படுத்திட உறுதிபூண்டுள்ளார்கள். அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களுக்கும், பிற நலத் திட்டங்களுக்கும் போதிய நிதியை உறுதி செய்திட முனைப்பாக முயன்றுவரும் நம்முடைய அரசுக்கு அளப்பரிய துணிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே வழங்கி வருகிறார்கள். அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி சாமானிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாநிலத்தை புகழின் உச்சிக்கு இட்டுச்செல்வார்கள் என்பது உறுதி.

152. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! வரலாறு பல தலைவர்களைப் பற்றி குறிப்பிடுகிறது. ஆனால், அந்த வரலாற்றையே ஒரு சில தலைவர்கள் உருவாக்க வல்லவர்கள். அத்தகைய வரலாற்றை உருவாக்கும் வல்லமை படைத்த தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறன்

மிக்க தலைமையில் பணி புரிவதில் நான் பெருமை கொள்கிறேன். அனைவருடைய எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யும் வகையில், அதுவும் தற்போதுள்ள கடினமான நிதிச் சூழலில், ஒரு வரவு–செலவுத் திட்டத்தை தயாரிப்பது என்பது ஒரு கடினமான சவாலாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது ஆழ்ந்த அறிவாலும், சிந்தனையைத் தூண்டும் கருத்துக்களாலும், முழுமையான ஆதரவை வழங்கி, தன் அளவற்ற விவேகம் மற்றும் பரந்த அனுபவத்தால் வழி நடத்திய காரணத்தினால் மட்டுமே, இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து அளித்திட முடிந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறன்மிகு வழிகாட்டுதலுக்கும், பெரும் ஆதரவிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

153. இந்த நிதிநிலை அறிக்கையினை தயாரிப்பதில் என்னுடன் அயராது பணிபுரிந்த நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு க. சண்முகம், இ.ஆ.ப. அவர்களுக்கும் அவருடன் பணியாற்றிய நிதித்துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

154. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**ஓ. பன்னீர்செல்வம்**
நிதி மற்றும் பொதுப் பணிகள் அமைச்சர்

சென்னை
2014 ஆம் ஆண்டு
பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2045
விஜய – மாசித் திங்கள் 1 ஆம் நாள்

## இணைப்பு

## இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

தமிழ்நாடு நிதி நிலைப் பொறுப்புடைமைச் சட்டம் 2003 ன் 3(1) பிரிவின்படி, மாநில அரசு, வரவு–செலவுத் திட்ட அறிக்கையுடன் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும் சட்டப் பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின் 3(2) பிரிவின்படி, நிதி நிலைக் குறியீடுகளான வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகியவை குறித்த இலக்குகளை வரும் சில ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டு, அதற்கான அனுமானங்களை விளக்கி, இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி, வரும் ஆண்டு மற்றும் அதற்கடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு, அதாவது 2015–2016 ஆம் ஆண்டிலிருந்து, இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் தயாரிக்கப்பட்டு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

**நோக்கங்கள்**

வளர்ச்சி திட்டச் செலவினங்களுக்கான தேவைகள் மற்றும் நிதி சிக்கனத்திற்கும் இடையே ஒரு சமநிலையை ஏற்படுவது இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த அரசால் தொடங்கப்பட்டுள்ள பல்வேறு நலத் திட்டங்கள், உயர்ந்துவரும் மூலதனச் செலவு மற்றும் அதிக அளவிலான அகவிலைப்படி உயர்வு போன்ற எதிர்பாராத செலவினங்கள் போன்றவற்றிற்கான நிதித் தேவைகள் அனைத்தும் மாநிலத்தில் அளவான நிதி ஆதாரங்கள் மூலமாகவே நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளன. அதே வேளையில், பதிமூன்றாவது நிதிக்குழு வகுத்துள்ள இலக்குகளுக்கு இணங்க நிதிநிலை உறுதித்தன்மையை அடையவும் அரசு உறுதியாக உள்ளது. இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டமானது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிநிலை

இலக்குகளை **2014–2017** ஆண்டு காலத்திலும் மற்றும் அதனைத் தொடர்ந்து பராமரிப்பதையும் உறுதி செய்கிறது.

**(அ)** வருவாய் உபரி தொடரும்.

**(ஆ)** நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் **3** சதவீதத்திற்குள் இருக்கும்.

**(இ)** மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் சதவீதமானது, **13**வது நிதிக் குழு நிர்ணயித்துள்ள வரம்பிற்குள் பராமரிக்கப்படும். அதாவது, **2014–2015** ல் **25.2** சதவீதத்திற்குக் குறைவாகப் பராமரிக்கப்படும்.

**எதிர்காலக் கணிப்புகள்**

**2014–2015** ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பின் வளர்ச்சி பதிமூன்றாவது நிதிக்குழு மதிப்பிட்ட அளவிலேயே கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது. உண்மையான வளச்சி விகிதம் குறைவாக இருக்கும் போதிலும், தற்போதைய போக்குகளின் அடிப்படையில் பண வீக்கம் அதிகமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

I. **வருவாய்க் கணக்கு வரவுகள்**

**2014–2015** ஆம் ஆண்டில் மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் ரூ.**1,27,389.83** கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**1. மாநில அரசின் சொந்த வரிவருவாய்**

வரிவசூல் திறனை உயர்த்துவதற்கும், வரி செலுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மாநிலத்தில் வரி இணக்கமும்

ஏற்கெனவே சிறப்பாக உள்ளது. எனவே, கூடுதல் வருவாய் திரட்டுவதற்கான வாய்ப்பு குறைவாகும். எனவே, வரிவருவாய் வளச்சி இனிமேல் நிலையாகவே இருந்து சராசரி வளர்ச்சி வீதமே எய்தப்படும்.

2013–2014 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டின்படி மாநில அரசின் சொந்த வரி வருவாய் ரூ.83,363.21 கோடியாகும். 2014–2015ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி இது ரூ.91,835.35 கோடியாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 10.16 சதவீத வளர்ச்சியாகும். வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2014–2015 ன் படி, 2014–2015 ஆம் ஆண்டிற்கான மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் மாநில அரசின் சொந்த வரி வருவாய் விகிதம் 9.75 ஆக இருக்கும். 2015–2016 ஆம் ஆண்டிற்கு 13.13 சதவீத வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் முக்கிய அம்சங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2014–2015 ல் வணிக வரியின் மூலம் பெறப்படும் வரவுகள் ரூ.68,724.06 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2013–2014 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளை விட 11.04 சதவீதம் வளர்ச்சி கொண்டதாக இருக்கும்.

(ஆ) 2014–2015 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை வரவுகள் ரூ.6,483.04 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் அதிக வளர்ச்சி விகிதம் இருந்ததைக் கருத்தில் கொண்டு, திருத்த மதிப்பீடு 2013–2014 ஐ விட 10.47 சதவீதம் உயர்வாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

(இ) 2014–2015 ஆம் ஆண்டில் முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவு மூலமாகக் கிடைக்கும் வரவுகள், 13.54 சதவீதம் அளவிற்கு வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, 2013–2014 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்டுள்ள ரூ.9,221.98 கோடி வருவாயை விட உயர்ந்து, 2014–2015 ஆம் ஆண்டில் ரூ.10,470.18 கோடியாக இருக்கும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஈ) மோட்டார் வாகன வரிவருவாய் 2013–2014 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்டுள்ள ரூ.4,583.02 கோடியை விட உயர்ந்து, 2014–2015 ஆம் ஆண்டில் ரூ.5,147.14 கோடியாக இருக்கும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 2. வரி அல்லாத வருவாய்

வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2014–2015 ல் வரி அல்லாத வருவாய் ரூ.8,083.98 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. சுரங்கத் தொழிலுக்கு நமது மாநிலத்தில் குறைந்த வாய்ப்புகளே உள்ளதாலும், பெரும்பாலான அரசு சேவைகள் விலை இல்லாமலோ அல்லது குறைந்த விலையிலேயே வழங்கப்படுவதாலும், திருத்த மதிப்பீடு 2013–2014 ஆம் ஆண்டு அளவிலிருந்து குறைவான அளவிலேயே வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2015–2016 மற்றும், 2016–2017 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் முறையே 2.26 மற்றும் 10.40 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**3. மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு**

மத்திய அரசு பகிர்ந்தளிக்கக்கூடிய நிகர வரி வருவாயில் தமிழக அரசின் பங்கினை, சேவை வரியைப் பொறுத்த வரையில் **5.374** சதவீதத்திலிருந்து **5.047** சதவீதமாகவும், ஏனைய வரிகளைப் பொறுத்த வரையில் **5.305** சதவீதத்திலிருந்து **4.969** சதவீதமாகவும் குறைத்து பதிமூன்றாவது நிதிக்குழு நிர்ணயித்துள்ளது. **2014–2015** ஆம் ஆண்டிற்கான மத்திய வரிகளில் பங்கு ரூ.**19,014.23** கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. **2015–2016** மற்றும் **2016–2017** ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் முறையே **16.31** மற்றும் **14.29** சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4. மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்,**

**2014–2015** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் ரூ.**8,456.27** கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் பல்வேறு திட்டம் மற்றும் திட்டம்சாராப் பணிகளுக்கான நிதியுதவிகள், மற்றும் **13**வது நிதிக்குழு பரிந்துரைத்துள்ள நிதியுதவி ஆகியன கருத்தில் கொள்ளப்பட்டன. **2015–2016**, **2016–2017** ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் முறையே **10.32** மற்றும் **10** சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**II. வருவாய்க் கணக்கில் செலவுகள்**

**2014–2015** ஆம் ஆண்டிற்கான வருவாய்க் கணக்கு செலவுகள் ரூ.**1,27,100.47** கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது திருத்த மதிப்பீடு **2013–2014** ஐக் காட்டிலும் **9.04** சதவீதம் கூடுதலாகும்.

வருவாய்க் கணக்கு செலவுகளின் முக்கிய கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(1) 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் சம்பளம் குறித்த ஒதுக்கீடு ரூ.35,720.86 கோடி மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவினத்திற்கான ஒதுக்கீடு ரூ.16,020.63 கோடியாகும். இவ்வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவுகள் மொத்த வருவாய்ச் செலவுகளில் 40.71 சதவீதமாகும். அகவிலைப்படி உயர்வு, சம்பள உயர்வு மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புவதால் ஏற்படும் கூடுதல் செலவு ஆகியவற்றின் காரணமாக, 2015–2016 மற்றும், 2016–2017 ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் முறையே 14.62 மற்றும் 20 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2016–2017 ஆம் ஆண்டு முதல் ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என கருதப்பட்டுள்ளது. முந்தைய ஊதியக் குழுக்கள் போலன்றி, இக்குழுவின் பரிந்துரைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் பிந்தைய ஆண்டுகளில் தவணைகளில் நிலுவைத் தொகை வழங்க வேண்டிய நிலை எழாது எனவும் கருதப்பட்டுள்ளது.

(2) 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மானியம் மற்றும் உதவித்தொகைக்கான ஒதுக்கீடு ரூ.49,068.03 கோடியாகும். அரசால் அறிவிக்கப்பட்டுள்ள பல்வேறு நலத்திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளால் இவ்வுயர்வு ஏற்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரிவருவாய் உயர்வுக்கு ஏற்ப, மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக நிதி

பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதுபோன்றே, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கூடுதல் மானியம் வழங்குவதும் மானியங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டை உயர்த்தியுள்ளது 2015–2016 ஆம் ஆண்டில் இதன் வளர்ச்சி விகிதம் 10 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்படுகிறது. 2016–2017 ஆம் ஆண்டிலும் இந்த வளர்ச்சி அதே விகிதத்தில் இருக்கும்.

(3) 2013–2014 திருத்த மதிப்பீட்டைக் காட்டிலும் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2014–2015 ல் ஊதியம் அல்லாத செயல்முறை மற்றும் பராமரிப்பு செலவுகள் 7.56 சதவீதம் அதிகரித்துள்ளன. இந்த உயர்வு, மடிக்கணினி, இலவச மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு சீருடை வழங்குதல் போன்ற திட்டங்களால் ஏற்பட்டுள்ளது. 2015–2016, 2016–2017 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் முறையே 10 மற்றும் 10 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்படுகிறது.

(4) 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் வட்டி செலுத்துதல் ரூ.15,463.90 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டிற்கான வட்டிச் செலவு மொத்த வருவாய் வரவில் 12.14 சதவீதமாகும். இவ்விகிதம் 2015–2016 மற்றும் 2016–2017 ஆம் ஆண்டுகளில் முறையே 12.28 சதவீதம் மற்றும் 12.07 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## III. மூலதனக் கணக்கில் செலவுகள்

2014–2015 ஆம் ஆண்டில் மூலதனம் குறித்த செலவுகளை பெருமளவு உயர்த்த இம்மாநிலம் கருதியுள்ளது. அதன் விளைவாக, மூலதனம் குறித்த செலவுகளுக்கு திருத்த மதிப்பீடு

2013–2014 ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.21,887.10 கோடியைவிட அதிகத் தொகை அளிக்கப்பட்டு, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2014–2015 ல் ரூ.26,003.67 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 18.80 சதவீத உயர்வைக் காட்டுகிறது. இது 2015–2016 ஆம் ஆண்டில் 12.91 சதவீதம் மற்றும் 2016–2017 ஆம் ஆண்டில் 10.12 சதவீதமாக வளரும் என கணிக்கப்பட்டுள்ளது.

## IV. வருவாய் உபரி மற்றும் நிதிப் பற்றாக்குறை

2014–2015 ஆம் ஆண்டில் வருவாய் உபரி ரூ.289.36 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மாநிலமானது, 2015–2016 மற்றும் 2016–2017 ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து வருவாய் உபரியை பராமரிக்கும். 2014–2015 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை ரூ.25,714.31 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.73 சதவீதமாக இருக்கும். வரும் ஆண்டுகளில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2015–2016 ஆம் ஆண்டில் 2.70 சதவீதமாகவும், 2016–2017 ல் 2.67 சதவீதமாகவும் இருக்கும்.

## V. பொதுக் கடன்

2014–2015 ஆம் ஆண்டில் மாநில அரசு வாங்க அனுமதிக்கப்பட்ட கடன் அளவு ரூ.28,267 கோடியாகும். இருப்பினும், அரசு கடன் வாங்குவதைக் குறைக்க உத்தேசித்துள்ளது. மாநில அரசு தொகுநிதியில் நிகர கடன் வாங்குதல் ரூ.25,000.22 கோடியாக மட்டுமே மதிப்பிடப்பட்டுள்ளது. 31.03.2015 அன்று வருங்கால வைப்பு நிதி உள்ளிட்ட ஏனைய கடன் ரூ.1,78,170.76 கோடியாக இருக்கும். இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 18.91 சதவீதமாகும்.

## VI. உத்திரவாதங்கள்

ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் **100** சதவீத அளவு அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **10** சதவீத அளவு, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்கு அமையப்பெற வேண்டும். **31.3.2013** அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் **28.25** சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **3.49** சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் **75** சதவீதம் அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **7.5** சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். **31.3.2013** அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட அரசு உத்திரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் **6.02** சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **0.74** சதவீதமாவும் உள்ளது.

## முடிவு

**2010–2011** ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்த நிலையிலிருந்து நமது மாநிலம் மீண்டெழுந்துள்ளது. பதிமூன்றாவது நிதிக்குழு நிர்ணயித்துள்ள அனைத்து இலக்குகளையும் **2014–2015** ஆம் ஆண்டில் மாநிலம் அடையும். மேலும், வரும் ஆண்டுகளிலும் இதே நிலையை பராமரித்து வரும்.

* * * *

# அட்டவணை – இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

(ரூபாய் கோடியில்)

| பிப்ரவரி–2014 | 2012-2013 கணிப்புகள் | 2012-2013 கணக்குகள் | 2013-2014 கணிப்புகள் | 2013-2014 திருத்த மதிப்பீடு | 2014-2015 கணிப்புகள் | 2014-2015 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2015-2016 கணிப்புகள் | 2016-2017 கணிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருவாய் | 98,793.94 | 98,827.71 | 114,551.28 | 116,808.48 | 137,733.82 | 127,389.83 | 143,603.43 | 163,883.68 |
| மாநிலத்தின் சொந்த வருவாய் | 75,166.93 | 77,808.54 | 88,393.22 | 91,220.56 | 108,545.23 | 99,919.33 | 112,159.32 | 128,345.56 |
| வரி | 70,548.70 | 71,254.28 | 82,179.63 | 83,363.21 | 101,557.18 | 91,835.35 | 103,892.52 | 119,218.86 |
| வரி அல்லாதவை | 4,618.23 | 6,554.26 | 6,213.59 | 7,857.35 | 6,988.05 | 8,083.98 | 8,266.80 | 9,126.70 |
| மத்திய அரசிடமிருந்து பெறப்படுபவை | 23,627.01 | 21,019.17 | 26,158.06 | 25,587.92 | 29,188.59 | 27,470.50 | 31,444.11 | 35,538.12 |
| பங்கிடப்பட்ட வரிகள் | 15,077.74 | 14,519.69 | 17,287.34 | 16,485.97 | 19,878.51 | 19,014.23 | 22,114.89 | 25,275.98 |
| உதவி மானியம் | 8,549.27 | 6,499.48 | 8,870.72 | 9,101.95 | 9,310.08 | 8,456.27 | 9,329.22 | 10,262.14 |
| வட்டியல்லாத செலவு | 106,572.89 | 104,510.87 | 124,343.41 | 125,351.37 | 147,583.32 | 137,640.25 | 154,553.74 | 1,75,975.36 |
| சம்பளங்கள் (கல்விக்கான மானியங்கள் உட்பட) | 31,154.13 | 27,597.09 | 32,863.91 | 32,265.25 | 40,100.38 | 35,720.86 | 40,721.78 | 48,866.14 |
| ஓய்வூதியங்களும் ஓய்வுகாலப் பலன்களும் | 13,774.72 | 12,494.48 | 14,651.44 | 14,505.46 | 17,785.50 | 16,020.63 | 18,583.93 | 22,300.72 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும் | 7,871.01 | 8,493.75 | 9,684.42 | 10,036.99 | 10,366.76 | 10,796.27 | 11,875.90 | 13,063.49 |
| உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும் | 34,506.46 | 37,629.42 | 41,619.27 | 46,613.44 | 52,404.23 | 49,068.03 | 53,974.83 | 59,372.32 |
| ஏனைய வருவாய்ச் செலவினங்கள் | 7.34 | 16.85 | 39.88 | 43.13 | 45.54 | 30.79 | 35.10 | 38.96 |
| மூலதன ஒதுக்கீடு | 18,259.23 | 14,567.68 | 23,984.49 | 19,763.07 | 25,880.91 | 23,684.80 | 26,852.95 | 30,904.87 |
| நிகரக் கடன் வழங்கல் | 1000.00 | 3711.59 | 1500.00 | 2124.03 | 1000.00 | 2318.87 | 2509.25 | 1,428.87 |
| நிதிக் குறியீடுகள் | | | | | | | | |
| முதன்மை உபரி(+) / பற்றாக்குறை (–) | -7,778.95 | -5,683.16 | -9,792.13 | -8,542.89 | -9,849.50 | -10,250.42 | -10,950.31 | -12,091.68 |
| வட்டி செலுத்துதல் | 10,130.17 | 10,835.84 | 12,587.11 | 13,099.94 | 13,584.93 | 15,463.90 | 17,628.46 | 19,787.77 |
| மொத்த வருவாய் வரவுகளில் செலுத்தப்பட்ட வட்டித் தொகை | 10.25% | 10.96% | 10.99% | 11.21% | 9.86% | 12.14% | 12.28% | 12.07% |
| வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–) | 1350.11 | 1,760.27 | 3105.26 | 244.27 | 664.06 | 289.36 | 783.43 | 454.29 |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (–)% | 1.37% | 1.78% | 2.71% | 0.21% | 0.56% | 0.23% | 0.55% | 0.28% |
| நிதி உபரி(+) / பற்றாக்குறை(–)யில் வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–)% | -8.00% | -10.66% | -14.00% | -1.13% | -2.89% | -1.13% | -2.74% | -1.43% |
| நிதி உபரி(+) / பற்றாக்குறை(–) (சரிக்கட்டப்பட்டவை) | -17,909.12 | -16,519.00 | -22,379.23 | -21,642.83 | -22,938.57 | -25,714.32 | -28,578.77 | -31,879.45 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதி உபரி(+) / பற்றாக்குறை(–) (சரிக்கட்டப்பட்டவை) % | -2.74% | -2.39% | -2.88% | -2.68% | -2.52% | -2.73% | -2.70% | -2.67% |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP) | 6,54,340.00 | 6,90,542.00 | 7,76,859.75 | 8,08,766.00 | 9,09,861.75 | 9,42,225.00 | 10,60,003.13 | 11,92,503.52 |